Registered as a news paper. இலவசப் பிரதி பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ராம்கோ ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
(சீ-485)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மாசி 21 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 01 (05.03.2003) புதன்கிழமை இதழ் :154


## புதிய கண்காணிப்பு தலைவருடன் தளபதி கேணல் கருணா சந்திப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கரடியனாறிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் செயலகத்தில் - நேற்றுக் காலை 9 மணிக்கு இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் ரெலவ்சனுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணாவுக் குமிடையிலான சிநேகபூர்வ சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது, மட்டக்களப்பு யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு தலைவர் லைய்லா மற்றும் ஹெளெக்கி ஆகியோரும் சமுகமளித்திருந் தனர். புலிகள் தரப்பில் மூத்த தளபதி கருணா அம்மானுடன் மட்டக்களப்பு - அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஸ், மகளிர் படையணித் தளபதி நிலாவினி, உட்பட முக்கிய தளபதிகளும் கலந்துகொண்டனர்.

அறிமுகத்துடன் ஆரம்பமான இச்சந்திப்பு - நட்பார்ந்த சூழலில் நடைபெற்றதுடன், பல விடயங்கள் பற்றியும் ஆராயப்பட்டது. (10)





கண்காணிப்புக்குழுவினரையும் கேணல் கருணா தலைமையிலான புலிகள் தரப்பினரையும் படங்களில் காணலாம்

## இரண்டாவது நாளாகவும் அத்துமீறல் தொடர்ந்தது

# மேலும் 105 இந்திய மீனவர்கள்

# தலைமன்னார் கடலில் பிடிபட்டனர்

### உள்ளூர் மீனவர்களால் மீண்டும் சுற்றிவளைப்பு

(மன்னார்)

**நேற்றுமுன்தினம் மன்னார்க் கடலில் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயம் இலங்கை மீனவர்களால் பிடிக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து, நேற்றும் ஒரு தொகை இந்திய மீனவர்கள் மன்னார்க் கடலில் நுழைந்துள்ளனர். இவர்களையும் மன்னார் மீனவர்கள் சுற்றிவளைத்துப் பிடித்து, கரைக்குக் கொண்டுவந்தனர். இச்சம்பவம் நேற்றுமாலை தலைமன்னார்ப் பகுதியில் நடைபெற்றது.**

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது,

தலைமன்னார் கடலில் நேற்று மீண்டும் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நூற்றிஐந்து இந்திய மீனவர்களை உள்ளூர் மீனவர்கள் பிடித்து வந்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

நேற்று மாலை தலைமன்னாரில் உள்ள பழைய பாலத்தடி என்ற கடற்பரப்புக்குள் சுமார் இருபத்திநான்கு படகுகளில் நூற்றிஐந்து இந்திய மீனவர்கள் பிரவேசித்தனர்.

இதனைத் தொடர்ந்து உள்ளூர் மீனவர்கள் அப்பகுதிக்கு விரைந்து சென்றனர். இந்திய மீன்பிடிப்படகுகளைச் சுற்றி வளைத்த உள்ளூர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

சின்ன மீனைப் போட்டு
பெரிய மீனைப் பிடிப்பது எப்படி...?
யாழ்.நகரில் நடந்த திடுக்கிடும் மோசடி!
ஆரவாரம் எதுவும் இல்லாமல் அமைதியாகத்தான் அந்த அலுவலகம் இயங்கிக்கொண்டிருந்தது. அவர்கள் பக்கம் எவரும் மூக்கு நுழைத்துக் கொள்வதை அந்த அமைதி தடுத்து விட்டது. அதனைச் சாதகமாகப் பயன்படுத்தி அவர்களின் காரியங்கள் அரங்கேற ஆரம்பித்தன...
சனியன்று ஆரம்பமாகிறது அதிரடித் தொடர்

## மீனவர்கள் அகப்பட்டது பற்றி மாநிலங்களவையில் விவாதம்

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க சகல நடவடிக்கைகளையும் இந்திய அரசு எடுத்துவருவதாக நேற்று, இந்தியாவின் மாநிலங்களவையில் உறுதியளிக்கப்பட்டது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி, நேற்று மாநிலங்களவையில் தமிழக உறுப்பினர்கள் கோஷம் எழுப்பியபோதே - சபைத் தலைவரும், நிதியமைச்சருமான ஜஸ்வந்த்சிங் மேற்படி உறுதிமொழியை வழங்கினார்.

தமிழக மீனவர்கள் மீது கடந்த திங்கள் இரவு மட்டுமல்ல, தொடர்ச்சி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மகளிர் விவகார உபகுழுக் கூட்டம் இன்றும் நாளையும் கிளிநொச்சியில்

(கொழும்பு)

மகளிர் விவகாரங்களுக்கான உபகுழுவின் கூட்டம் - இன்றும் நாளையும் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது. சமாதான நடைமுறைகளில் மகளிர் பங்களிப்பு தொடர்பாக இந்த உபகுழு ஆராயவுள்ளது.

இக்குழுவின் ஆலோசகராக டாக்டர் அஸ்ரிட் நோர்வேயினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கூட்டம் இன்று காலை 10.30 மணியளவில் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இக்குழுவில் அரசதரப்பு உறுப்பினர்களான கலாநிதி குமாரி ஜெயவர்த்தனா, கலாநிதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



இனியாவது ஊடுருவி உருவுறது நிப்பாட்டுப்படுமோ... ?

## போரில் பாதிப்புற்ற சிறுவர்களுக்கான பொதுவேலைத்திட்டத்துக்கு இணக்கம்

### திட்டம் குறித்து யுனிசெப் - விடுதலைப் புலிகள் ஆராய்வு

யுத்தத்தில் வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பாக பொதுத்திட்டங்களை முன்னெடுக்க விடுதலைப் புலிகள் இயக்கமும் யுனிசெப் அமைப்பும் இணக்கம் கண்டுள்ளன. இது தொடர்பாக எதிர்வரும் 10 ஆம் திகதி இருதரப்பும் வரையப்பட்ட ஒப்பந்தம் ஒன்றையும் பரிமாறிக் கொள்ளவுள்ளனர்

அத்துடன் - விடுதலைப் புலிகளும், தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், யுனிசெப் அமைப்பின் செயற்குழு ஒன்றும் எதிர்வரும் 14 ஆம், 15 ஆம் திகதிகளில் கூடி இந்த செயற்திட்டம் தொடர்பாக ஆராயவுள்ளன.

மேலும் - இத்திட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பாக ஆராயும் பொருட்டு, இம்மாத இறுதியில் விசேட செயலமர்வும் இடம்பெறும்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க, பிரிட்டிஷ் தூதரங்களுக்கு பாதுகாப்பு

(கொழும்பு)

கொழும்பில் உள்ள அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் தூதரங்களின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது. வளைகுடா போர் அச்சுறுத்தல் காரணமாக இத்தூதரகங்களுக்கு கடும் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக உள்துறையமைச்சு தெரிவித்துள்ளது.

விசேட அதிரடிப்படைப் பிரிவுகள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
(சீ-518)
021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128.

# அங்கிலிக்கன் திருச்சபையில் பெண் மதகுருக்கள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

அங்கிலிக்கன் திருச்சபையில் இலங்கையில் முதலாவதாக நான்கு பெண் மதகுருக்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வண.மாலினி தேவானந்த, வண.குளோறி தேவராஜ், வண.குணவதனி செல்வராஜா, வண.சந்திரிகா மதுராந்தி ஆகியோரே பெண் மத குருக்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனத்தை அங்கிலிக்கன் திருச்சபையின் பேராயர் துலிப்.டி சிகேரா வழங்கியுள்ளார்.

## கட்டாக்காலி நாய்கள் பிடிக்கும் பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியில், கட்டாக்காலி நாய்களைப் பிடிக்கும் பணியில் மீண்டும் மாநகரசபை ஊழியர்கள் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். அண்மைக்காலமாக, பலர் விசர் நாய்க்கடிக்கு உள்ளாகியதையடுத்தே கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனால் கட்டாக்காலி நாய்களின் தொல்லை குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## மிதிவெடி விழிப்புணர்வு ஆற்றுகை

மக்கள் மத்தியில் மிதிவெடி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் அரங்க இயக்கம் - யுனிசெவ் நிறுவனத்தின் நிதியுதவியுடன் "முடக்கம்" எனும் பரப்புரை ஆற்றுகை நிகழ்வை பாடசாலைகள் சனசமூக நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் மாலைவேளைகளில் நடத்திவருகின்றது.

குறிப்பாக - மிதிவெடி, வெடி பொருட்களின் அபாயம் பெருமளவில் உள்ள தென்மராட்சிப் பிரதேசத்திலேயே இந்நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கைகலப்பில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

அயல் வீட்டாருடன் நடைபெற்ற கைகலப்பில் இருவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினமிரவு 9 மணிக்கு புத்தூர் கிழக்கில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில், கிருஷ்ணன் தங்கராசா(வயது 44), இரத்தினம் இராஜேஸ்வரி(வயது 54) ஆகிய இருவருமே வாள் வெட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

கைதடிப் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று வாகனத்துடன் மோதியதில் இளைஞர் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில், கைதடி கிழக்கைச் சேர்ந்த முத்துக்குமாரு பிரதீசன்(வயது 24) என்பவரே காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

# எரிபொருள் விநியோகத்தை தம்வசப்படுத்த இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் முயற்சி!

(கொழும்பு)

இலங்கையின் எரிபொருள் இறக்குமதி, விற்பனை நடவடிக்கைகளை முழுமையாகத் தம்வசப்படுத்திக் கொள்ள இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் முயற்சிகளை எடுத்துவருவதாகத் தெரியவருகின்றது.

இலங்கையின், பெற்றோலிய இறக்குமதி மற்றும் விநியோக உரிமைகளை இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனம் அண்மையில் பெற்றிருந்தது. இதன்படி, நாடு முழுவதும் 100 பெற்றோல் நிலையங்களை இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனம் திறந்துள்ளது.

இதேவேளை, கட்டுநாயக்க விமான நிலையத்துக்குவரும் வெளிநாட்டு விமானங்களுக்கான எரிபொருளை விற்பனை செய்வதற்கு அனுமதியளிக்குமாறு, இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

விரைவில் சர்வதேச விமானச் சேவைகளுக்கான எரிபொருள் விற்பனை உரிமையையும், சமையல் எரிவாயு விற்பனையை ஆரம்பிப்பதற்கான உரிமையையும் இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்துக்குக் கிடைத்துவிடக்கூடிய சாத்தியம் இருப்பதாக அந்நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது மாதமொன்றுக்கு 30 ஆயிரம் தொன் டீசலையும், 10 ஆயிரம் தொன் விமான எரிபொருளையும் விநியோகிக்கும் உரிமையை இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் பெற்றுள்ளது.

அத்துடன், சீனன்குடாவிலுள்ள எரிபொருள் குதங்களையும் 35 வருடக் குத்தகைக்கு இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

## வடமராட்சிக் கடலில்

# இந்திய மீனவர் அச்சுறுத்தல் மீனவர்கள் கரை திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கடற்பரப்பில் கடற்தொழிலுக்கு சென்ற மீனவர்கள் இந்திய மீனவர்களின் அச்சுறுத்தலால் தொழிலில் ஈடுபடமுடியாது திரும்பினர்.

நேற்றிரவு வடமராட்சி மீனவர்கள் கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை, இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்த முந்நூறுக்கு மேற்பட்ட இந்திய மீனவர்கள் கூட்டம் கூட்டமாக மீனவர்களைச் சுற்றி வளைத்து கத்திகள், வாள் சகிதம் மிரட்டியுள்ளனர். கடற்தொழிலில் ஈடுபட்ட மீனவர்கள் அச்சத்தினால் தொழிலில் ஈடுபடாது கரைக்குத் திரும்பினர்.

தினமும் பாரிய மீன்பிடி ரோலர்களில் கூட்டமாக வரும் இந்திய கடற்தொழிலாளர்கள், வடமராட்சி மீனவர்களை மிரட்டுவதாக கடற்தொழிலாளர்கள்- வடமராட்சி வடக்கு சமாசத்தில் முறையிட்டுள்ளனர்.

கடற்படையினரின் அத்துமீறல்கள் குறைந்து, தற்போது கடற்தொழிலில் ஈடுபடக்கூடியநிலை ஏற்பட்டுள்ள சூழலில் இந்திய மீனவர்கள் இங்கு வந்து வலைகளை அறுத்துச் செல்வதுடன், அச்சுறுத்துகின்றனர் என வடமராட்சி மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்திய மீனவர்கள் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவித்து, இன்னமும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மீனவர்களது பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவர சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லையெனில் மீனவர், நுகர்வோர் இணைத்து மாபெரும் போராட்டங்களை நடத்துவோம் எனவும் அது தொடர்பாக ஆலோசனை நடாத்தி வருவதாகவும் வடமராட்சி வடக்கு சமாசத்தின் செயலாளர் க.சூரியகுமாரன் தெரிவித்துள்ளார்.

# துன்னாலைப் பகுதியில் சட்டவிரோத மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

துன்னாலை தெற்கு, மேற்கு, கிழக்கு ஆகிய பகுதிகளில் சட்டவிரோத மின்சாரம் பெறுபவர்களின் தொகை நாளுக்குநாள் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்களால் முறைப்பாடுகள் செய்யப்படுகின்றன.

இவ்வாறு சட்டவிரோத மின்சாரம் பெறுவோர் தொலைக்காட்சி, வானொலி என்பவற்றை உரத்த சத்தத்தில் பயன்படுத்துவதால் ஏனைய வீடுகளில் மாணவர்கள் படிப்பதற்குக் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும் நித்திரையின்றி அல்லற்படுவதாக பலரும் கவலை தெரிவிக்கின்றனர். (13)

## கல்வி அமைச்சர் யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகள் கல்வி அமைச்சர் சுரனிமல ராஜபக்ஷ எதிர்வரும் 11, 12 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இரு தினங்கள் தங்கியிருக்கும் இவர் குடாநாட்டில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவுள்ளார்.

வடமராட்சி, தென்மராட்சி, யாழ்ப்பாணம், வலிகாமம் மற்றும் தீவகப் பாடசாலைகளில் புதிதாக அமைக்கப்பட்ட நூலகங்களை இவர் திறந்து வைக்கவுள்ளார்.

## சிறு விளம்பரம்

### தேவை

பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை. தொடர்பு:- தேசிய பாதுகாப்பு திட்டம் (National Security Project), 181/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (269)

Heidel berg சிலிண்டர் அச்சியந்திரம்- SBB, SBG, SBD வகைகளில் தேவை. தொடர்பு:- விளம்பர இல-11, மே/பா 'நமது ஈழநாடு" T.P:- 0777-722861 (270)

### காணவில்லை

**AXLE FOLEY**

YOU MUST CONTACT SISTER IS HOME; IMPROPER,YOU MUST CONTACT, YOUR FUNDS ARE DISMAL, INSUFFICIENT RAIDER, LOS ANGELES. K.UMASUTHAN, 112, PALALY ROAD, (268)

## வாழ்க வளமுடன்

### நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

பத்தாவது அகவையில்



HAPPY BIRTHDAY

பெயர் : அ.அமல்ராஜ்

முகவரி: கண்டாவத்தை, கரவெட்டி மத்தி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி:------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------------

பெற்றார் ஒப்பம்


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு**

**அறிவித்தல்**

**வணிக மாணி பகுதி I - 2001 தேர்வு**

05.03.2003 தொடக்கம் நடைபெறவிருந்த மேற்படி பரீட்சை தவிர்க்க முடியாத காரணங்களினால் 10.03.2003 தொடக்கம் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றேன்.

புதிய பரீட்சை அட்டவணையை வெளிவாரி அலகில் பெற்றுக் கொள்ளவும்.

பதிவாளர்
04.03.2003 (சி/654)



**விற்பனைக்கு**

றோணியோ மெசின் உடனடி விற்பனை. நேரில் வந்து விலைகோரவும். இவை தவிர, அலுவலக அலுமாரி, கோவை அலுமாரி, சிறிய அலுமாரி, உங்கள் அலுவலக உபகரணங்கள், பிறிண்டிங் மெசின் ஆகியன, நேரில் வரவும்.

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டஸ்**

(சி-655) 212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.



**ராஜா** யாழ்ப்பாணம்.

இன்று 50 ஆவது தினம்

விஜய், ஸ்நேகா, மணிவண்ணன், வடிவேல் நடித்த



**வசீகரா** 10.30, 2.30,

இன்று மட்டும்
TOM CRUISE
MISSION IMPOSSIBLE - 2
M.I.2 அஞ்சாநெஞ்சன்
இரவு 7.00, 9.30 மட்டும். (சி-628)



**நிறைஞ்சனாஸ்** சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
ஷாம், மீராஜஸ்மின் நடித்த
**பாலா**
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 மணி காட்சி
**U 571**
அதிரடித் தாக்குதல் நிறைந்த படம். (சி-627)


## இன்றைய நாள் இனிய நாள்

**05-03-2003 - புதன்கிழமை**

| | | |
|---|---|---|
| மேடம் | :- | பிரயாணத்தால் செலவு, தருமகாரிய சித்தி, செளபாக்கியம், இல்லச்சிறப்பு. |
| இடபம் | :- | இனசன விரோதம், பணக்குறைவு, பிரையாசை மிகுதி, பிரயாணக் கஷ்டம். |
| மிதுனம் | :- | காரியவெற்றி, நற்குணவிருத்தி, கோபமிகுதி, பொதுசன மதிப்பு, நற்கீர்த்தி. |
| கர்க்கடகம் | :- | தாரபுத்திரரால் கவலை, பயனற்ற பிரயாசம், இனசன கொண்டாட்டம். |
| சிங்கம் | :- | தேகமெலிவு, அக்கினிப்யம், இனசன விரோதம், தார சுகதடை, வாக்குக்கலகம். |
| கன்னி | :- | லட்சுமிகரம், அதிகார சித்தி, இல்லச்சிறப்பு, பொதுசன மதிப்பு. |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | | |
|---|---|---|
| துலாம் | :- | அதிக செலவு, காரிய அனுகூலம், இடையூறு, ஏமாற்றப்படுதல், தேகசுக் குறைவு. |
| விருச்சிகம் | :- | பணவரவு, புதியஸ்தானம், இல்லச்சிறப்பு, பிரயாணத்தால் நன்மை. |
| தனு | :- | பொருட்சேதம், பிரயாணக் கஷ்டம், தொழில் சமநிலை, தேகமெலிவு. |
| மகரம் | :- | களஸ்திர, புத்திர மகிழ்ச்சி, இல்லச்சிறப்பு, காரிய வெற்றி, அன்னிய உதவி. |
| கும்பம் | :- | எதிர்பாராத செலவு, நிலைமாற்றம், புத்திக்குறைவு, விஷ, ஆயுத பயம். |
| மீனம் | :- | வாகன சுகம், பிரயாணம், அன்னிய உதவி, குடும்பச்சிறப்பு, சுபகாரிய சித்தி. |

# சமாதான முயற்சிகளின் பலன்கள் வடபகுதி மக்களுக்கு கிடைக்கவில்லை!

## புலிகள் கூறுவது உண்மையே என்கிறார் ரணில்



தற்போது முன்னெடுக்கப்படும் சமாதான நடவடிக்கைகள் மூலம் கிடைத்துள்ள பலன்களை வடபகுதி மக்கள் முழுமையாக அனுபவிக்கவில்லை என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளமை உண்மையாகும்.

- இவ்வாறு பிரதமர் ரணில் தெரிவித்துள்ளார். இந்திய விஜயத்தின்போது "இந்தியா ருடே" சஞ்சிகையின் ஏற்பாட்டில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைத்து, இருதரப்பினருக்குமிடையில் புரிந்துணர்வை வளர்ப்பதன்மூலமே நிரந்தரச் சமாதானத்தை ஏற்படுத்தமுடியும்.

விடுதலைப் புலிகள் மீது நம்பிக்கை கொள்ளமுடியுமா என்பது தற்போதைய பிரச்சினையல்ல. இருதரப்பினருக்குமிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதே முக்கிய பிரச்சினையாகும்.

யுத்தத்தினால் வடக்கு - கிழக்கின் நிர்வாகக் கட்டமைப்பு முற்றாகச் செயலிழந்துள்ளது. இதனை மிகக் குறுகியகால இடைவெளியில் கட்டியெழுப்பமுடியாது. ஆயினும், மிக விரைவில் வடக்கு - கிழக்கை வழமைக்குக் கொண்டுவரத் தேவையான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுவதாகவும் -

வடக்கு - கிழக்குக்கான விசேட திட்டங்கள் விரைவில் அமுல்படுத்தப்படும் என்றும் - அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான தரைவழித் தொடர்புகளை ஏற்படுத்துவதற்காக அம்பாந்தோட்டைக்கும் மும்பாய்க்கும் இடையில் நெடுஞ்சாலை அமைக்கப்படவுள்ளதாகவும் பிரதமர் ரணில் தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாகக் கொழும்புக்கும் மாத்தறைக்கும் இடையிலான நெடுஞ்சாலை அமைக்கும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. அடுத்ததாக மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை வரையும், பின்னர் கொழும்பிலிருந்து மன்னாருக்கும் நெடுஞ்சாலை அமைக்கப்படவுள்ளது.

இதேபோல, இந்தியாவிலும் இராமேஸ்வரத்திலிருந்து சென்னை, பெங்களூர் வழியாக மும்பாய்க்கு நெடுஞ்சாலை அமைக்கப்படவுள்ளது.

இந்தியாவுடனான வர்த்தக உறவுகளை இதன்மூலம் பலப்படுத்திக் கொள்ள முடியும் என்றும், அம்பாந்தோட்டையில் 'ஈ - ஸ்ரீலங்கா வேல்ட் சிற்றி' என்ற நகரஉருவாக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இல்ல மெய் வல்லுநர் போட்டி

(உடுத்துறை)

உடுத்துறை மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப. 2 மணிக்கு வித்தியாலய அதிபர் சா.அரியகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராகப் பளைப் பிரதேச உதவி அரசாங்க அதிபர் சு.புத்திசிகாமணியும், கௌரவ விருந்தினர்களாக - வடமராட்சி கிழக்குக் கடற்புலிகளின் அரசியற்துறைப்பொறுப்பாளர் தீபன், மருதங்கேணி உதவி அரச அதிபர் ப.வேலாயுதபிள்ளை ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (117)

## இளைஞர் படையணியின் முகாம்

(கொழும்பு)

இளைஞர் படையணியால் நடத்தப்படவுள்ள 'இளைஞர் முகாமை' அடுத்த வாரத்தில் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் முடிவுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் படையணியில் இணையும் இளைஞர் ஒருவருக்குச் சாப்பாடு, இருப்பிடம், உத்தியோகச் சீருடை ஆகியவற்றோடு மாதம் 2000 ரூபா வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

## மந்திகை மருத்துவமனையில்

# சத்திரசிகிச்சைப் பிரிவு செயலிழக்கும் ஆபத்து

மந்திகை மருத்துவமனையில் சத்திரசிகிச்சைப் பிரிவு, செயலிழக்கும் அபாயநிலை தோன்றியுள்ளது.

இதுவரை காலமும் மந்திகை மருத்துவமனையின் சத்திரசிகிச்சைப பிரிவு முற்றுமுழுதாக பிரான்ஸ் நாட்டு மருத்துவ குழுவின் கண்காணிப்பின் கீழேயே இயங்கி வருகின்றது. இங்கு அரசாங்க சத்திர சிகிச்சை நிபுணர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை.

இந்நிலையில், எதிர்வரும் ஜூன் மாதத்துடன் எம்.எஸ்.எவ். மருத்துவர்களின் சேவை முடிவுக்கு வரவுள்ளது. இதையடுத்துச் சத்திரசிகிச்சைப் பிரிவு செயலிழக்கும்நிலை உருவாகியுள்ளது.

இதேவேளை, மந்திகை மருத்துவமனை தற்பொழுதுகூட பல வசதியீனங்களுடனேயே இயங்கிக் கொண்டிருக்கின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (13)

# சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாலேயே இலங்கைக்கு கூடுதலான நிதியுதவி கிடைக்கிறது

## தொழிலமைச்சர் மகிந்த சமரசிங்க

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துவரும் சமாதானப் பேச்சுவார்த்தையினாலேயே இலங்கைக்குக் கூடுதல் நிதியுதவிகள் கிடைக்கின்றன என்று அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

1991 ஆம் ஆண்டு வளைகுடாப் போரின்போது குவைத்தில் பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கான நஷ்டஈடு வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. அங்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கான நஷ்டஈட்டை வழங்கிய பின்னர் உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் -

எத்தனையோ ஆண்டு காலமாகக் குவைத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி வழங்கப்படாமல் இருந்தது. எமது அரசு பதவியேற்றபின்னரே குவைத் அரசுடன் பேசி, இந்த நிதியை வழங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றோம். இது பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் சமாதான முயற்சிக்குக் கிடைத்த வெற்றி.

இந்த வைபவத்தில் 150 பேர் நஷ்டஈடு நிதியைப் பெற்றுக்கொண்டனர். தொடர்ச்சியாக மேலும் பலருக்கு இந்தநிதி கிடைக்கவுள்ளது. குவைத், சவூதி அரேபியா ஆகிய நாடுகளின் தூதுவர்களும் இந்த வைபவத்தில் கலந்துகொண்டனர்.

# நாயன்மார்கட்டில் மோதல்; நால்வர் படுகாயமடைந்தனர்!

(யாழ்ப்பாணம்)

சிவராத்திரி தினத்தன்று நாயன்மார்கட்டுப் பகுதியில் இடம்பெற்ற இரு கோஷ்டியினருக்கிடையிலான மோதலில் நான்கு பேர் காயமடைந்தநிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் இதேயிடத்தைச் சேர்ந்த நாகலிங்கம் துரைசிங்கம் (வயது 57), சின்னத்தம்பி ஜெகநேசன் (வயது 41), கனகசூரி மகேந்திரம் (வயது 33), அருமைநாயகம் ராஜா (வயது 24) ஆகியோரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தச்சம்பவத்தில் மேலும் பலர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சனியன்று இருபாலையைச் சேர்ந்த இரு இளைஞர்களுக்கும், நாயன்மார்கட்டைச் சேர்ந்த ஒருவருக்கும் இடையில் நடைபெற்ற வாக்குவாதம், கைகலப்புவரை சென்றதால் இருவர் காயமடைந்தனர்.

பின்னர் பலர் குழுக்களாகச் சென்று நாயன்மார்கட்டைச் சேர்ந்தவர்களின் வீட்டினுள் நுழைந்து கம்பி, கத்தி, பொல்லுகளால் தாக்கினார்கள். இதனால், மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கோப்பாய்ப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## வாக்காளர் இடாப்பு பிரதிகள் வழங்கல் இடைநிறுத்தம்

2002 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு தயாரித்தல் வேலைகள் எதிர்வரும் 28 ஆம் திகதி முடிவுறுத்த வேண்டியிருப்பதால், சகல அலுவலர்களையும் அப்பணியில் ஈடுபடுத்துமாறும், வாக்காளர் இடாப்புப் பிரதிகள் வழங்குதலைத் தற்காலிகமாக இன்றுதொடக்கம் அடுத்த மாதம் 04 ஆம் திகதிவரை நிறுத்துமாறும், தேர்தல் ஆணையாளர் பணித்துள்ளார். இதனால் வாக்காளர் இடாப்புப் பிரதிகள் பெறுவோர் அடுத்தமாதம் 05 ஆம் திகதிக்குப்பின்பே, தேர்தல்கள் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு உதவித் தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

# திருகோணமலையிலுள்ள அரச காணிகள் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இல்லை!

உல்லாசப்பயணத்துறையை அபிவிருத்தி செய்தல் என்ற பெயரில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அரசாங்கக் காணிகளை வழங்குவதில்லை என்று திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

திருமலை அரச செயலகத்தில் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும, நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்தமுடிவு எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் துரைரட்ணசிங்கம், குணவர்த்தன ஆகியோரும் அரச அதிபர் நெலும்தெனியவும் மற்றும் இராணுவ, கடற்படை, பொலிஸ் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

நிலாவெளியில் தெங்கு அபிவிருத்திச்சபைக்குச் சொந்தமான 25 ஏக்கர் காணியை வெளிநாட்டு முதலீட்டாளருக்கு விற்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியானதையடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

# பின்தங்கிய கிராம மக்களுக்கு சட்ட சேவை வழங்க நடவடிக்கை

## சர்வோதயம் ஏற்பாடு

யாழ்.குடாநாட்டில் பின்தங்கிய கிராமங்களிலுள்ள மக்களுக்கான சட்ட உதவிகளை வழங்க சர்வோதயத்தின் சட்டசேவைப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

கல்வி மற்றும் பொருளாதார ரீதியாக வளர்ச்சிகுறைந்த இடங்களைத் தெரிவுசெய்து, சர்வோதயம் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

கிராமங்களில் பிறப்பு மற்றும் இறப்பு, திருமணப் பதிவுகளை மேற்கொள்ளாதவர்களுக்குப் பதிவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல், குடும்பரீதியாக ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்தல், காணி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல், ஊழிய சேமலாபநிதி பெறுதல், சுகாதார சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல், சிறுவர் உரிமைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறைகளைப் - பொலிஸ், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், கிராமிய ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட அபிவிருத்திக் குழுவினர் ஆகியோருக்கு வழங்குதல்போன்ற பல்வேறு சட்டசேவைகளை வழங்கிவருகின்றது.

இந்தச்சட்ட சேவைகளை மேலும் அபிவிருத்தி செய்வது தொடர்பான ஆலோசனைகளை வழங்க, மாவட்ட மட்டத்தில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

இதற்காகச் சட்டத்தரணிகள், பதிவாளர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள் போன்ற பல்வேறு திணைக்கள அதிகாரிகள், அலுவலர்களை உள்ளடக்குவதற்கு அமைப்பு ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகத் தெரியவருகின்றது.

### கணினிக் கருத்தமர்வு

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் 'கணினி எக்பிரஸ்' நடத்திய கணினி தொடர்பான கருத்தமர்வு நேற்றுமுன்தினம் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் இடம்பெற்றது.

இக்கருத்தமர்வின் முடிவில் பங்குபற்றியவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

## அடுத்த சுற்றுப் பேச்சுக்களில்

# முஸ்லிம் தனிக்குழு குறித்து பாலாவுடன் பேச முயற்சி

(யாழ்ப்பாணம்)

முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தேசிய ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் - புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்கேற்க வேண்டுமென்பதை வலியுறுத்தும வகையிலேயே, இச்சந்திப்புக்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அடுத்தகட்டப் பேச்சுக்களுக்கு முன்னர் புலிகளிடமிருந்து உறுதியான பதிலை இவர்கள் எதிர்பார்ப்பதாகவும் தெரியவருகின்றது.

# மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் 402 குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபா!

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி உதவி அரசாங்க பிரிவிலுள்ள மீளக்குடியமர்ந்த 402 பேருக்கு 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஒன்பது கிராம அலுவலர் பிரிவிலுள்ள 402 பேருக்கே இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. கிராம மட்டத்திலான குழுவே இவர்களைத் தெரிவுசெய்துள்ளது. இது தொடர்பாகக் கடந்த 28 ஆம் திகதி யாழ்.கச்சேரியிலிருந்து உயர்மட்டக் குழுவொன்று மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனைக்கு விஜயம்செய்து, கிராம மட்டக்குழுவினால் தெரிவுசெய்யப்பட்ட பெயர்ப்பட்டியலைப் பார்வையிட்டுச் சென்றுள்ளது.

அண்மையில் திறந்து வைக்கப்பட்ட சமுர்த்திவங்கி மூலமே இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகவும், அநேகமாக இவ்வாரத்தில் இக்கொடுப்பனவு வழங்கப்படலாமெனவும் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## அரசு - புலிகள் இடையே

# நிரந்தர அமைதிக்கான ஒப்பந்தம்;

# இதுவே இன்றைய அவசிய தேவை!

## ஓமானில் அமைச்சர் முகமட் தெரிவிப்பு

அரசாங்கத்துக்கும், புலிகளுக்கும் இடையிலான நிரந்தர அமைதிக்கான ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட வேண்டும். அதுவே இப்போது நடைபெற்று வரும் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும், சமாதானப் பேச்சுக்களுக்கு அடித்தளமாக அமையும் என்று மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் எம்.எச். முகமட் தெரிவித்துள்ளார்.

ஓமானுக்கு விஜயம் செய்துள்ள அவர், அங்கு செய்தியாளரிடம் பேசியபோதே இவ்வாறு தெரிவித்ததாக 'ரைம்ஸ் ஒவ் ஓமான்' செய்தி வெளியிட்டுள்ளது.

நாம் முன்னர் சமஷ்டிமுறையை எதிர்த்து வந்தோம். ஆனால், இன்று உலகில் மிக முக்கியமான நாடுகளான கனடா, ஜேர்மனி, பெல்ஜியம், சுவிஸ், அவுஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் சமஷ்டி ஆட்சி முறையே நிலவிவருகின்றது.

இப்போது உலகில் 50 இற்கும் மேற்பட்டநாடுகளில் சமஷ்டி ஆட்சி முறை உள்ளது. எமது நாட்டிலும் சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்தி, பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதில் எந்தத் தவறுமில்லை. சமஷ்டி முறைத் தீர்வைவிட்டால், எமக்கு வேறு வழியோ, தீர்வோ கிடைக்கப் போவதில்லை.

இந்தச் சமஷ்டிமூலம் பல்லின, பல மொழி பேசும் இலங்கையில், நிர்வாக அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்றும் அமைச்சர் எம்.எச்.முகமட் மேலும் தெரிவித்துள்ளார்.

## நெடுந்தீவில் காவலரண் அமைப்பு தடுத்து நிறுத்தக் கோரிக்கை

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் முகாம் அமைத்துள்ள கடற்படையினர்- குடியிருப்புப் பகுதிகளை அண்டிய பிரதேசங்களில் பனை மரங்களைத் தறித்துப் புதிய காவலரண்களை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதைத் தடுத்து நிறுத்தும்படி கோரி - நெடுந்தீவு மக்கள் ஒன்றியத்தால் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளருக்கு மகஜர் அனுப்பப்பட்டுள்ளது.

இம்மகஜரின் பிரதிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு, நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.(113)

## வலைப்பந்தாட்ட, கரப்பந்தாட்ட இறுதிப் போட்டிகள்

(மானிப்பாய்)

தெல்லிப்பளைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற வலைப்பந்து மற்றும் கரப்பந்தாட்டப் போட்டிகளின் இறுதிப் போட்டிகள் இன்றும், நாளையும் நடைபெறவுள்ளன.

இன்று கரப்பந்தாட்டச் சுற்றின் இறுதிப்போட்டிகள் மு.ப. 8.30 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்திலும், வலைப்பந்தாட்டச் சுற்றின் இறுதிப்போட்டிகள் நாளை காலை 8.30 மணிக்குக் குளமங்கால் றோ.க.த.க. பாடசாலை மைதானத்திலும் நடைபெறவுள்ளன. (42)

## மன்னார் - இந்திய மீனவர் கைகலப்பில் காயமுற்றோர்

மன்னார் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவர்களுக்கும், மன்னார் மீனவர்களுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதலில் காயமுற்ற 17 இந்திய மீனவர்கள் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இராமநாதபுரம் - உச்சிப்புளியைச் சேர்ந்த இவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு.

அ.நாகராஜா (36), அ.நாகேந்திரம் (32), ச.செந்தில் (20), சி.முருகன் (33), பி.பாலு (47), எம்.முருகன் (22), பி.சேகராஜ் (24), அ.சந்திரசேகர் (32), பி.முருகானந்தன் (32), ச.முருகன் (32), ந.ஜனார்த்தனன் (30), அ.இராமச்சந்திரன் (31), ரி.ஜனகன் (26), அ.செந்தில் (45), எஸ்.செட்டிக்குட்டி (31), எஸ்.முருகவேல் (31), அ.சந்திரவேல் (22).

## நீரிழிவு நோய் DIABETES

பகுதி 35

- ச.ஆ.கோபாலமூர்த்தி.

நிறைவாக...

நீடித்த இருமல், (குடல் இறக்கம் என நோயாளர் குறிப்பிடும்) கருப்பை இறக்கத்தை (UTERO VAGINAL PROLAPSE) ஏற்படுத்தக்கூடும் என்பதால் இருமலுக்குத் தாமதமின்றிச் சிகிச்சை பெறவேண்டும். தாம்பத்தியத் தம்பதியரில் மனைவிக்கு **VAGINAL CANDIDIASIS** அல்லது **VAGINAL TRICHOMONIASIS** நோய் ஏற்பட்டால், இந்தநோயைக் குணப்படுத்த வைத்தியர் சிபார்சுசெய்ய களிம்பை (CREAM), கணவரும் பயன்படுத்த வேண்டும். பரம்பரைச் செல்வாக்குடைய நீரிழிவு போன்ற நோய்களால் பிள்ளைகள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்க, நெருங்கிய உறவினரைத் திருமணம் செய்வதைத் (CONSANGUINITY MARRIAGE) தவிர்க்க வேண்டும்.

நீங்கள் நீரிழிவு நோயாளியாக இருந்தால் உணவுக்கட்டுப்பாடு, உடற்பயிற்சியுடன் நோயைக் கட்டுப்படுத்துவதற்குப் பேணவேண்டிய அளவுக் கட்டுப்பாடுகள் (TARGET FOR CONTROL) பின்வருமாறு: **F.B.S- 110 mg/dl.** இற்குக்கீழ் **PPBS - 140 mg/dl,** இற்குக்கீழ் **HBAIC - 6.5%** இற்குக்கீழ், **B.P - 130/85** (நீரிழிவு நோயில்லாதோருக்கு **BP - 140/90** இற்குக்கீழ் இருக்கவேண்டும் எனக்கூறப்படுவது நீரிழிவு நோயாளருக்குப் பொருந்தாது.) **BMI** - ஆண்கள் - 27, பெண்கள் - 25, குருதிக் கொழுப்புக்கள், **TOTAL CHOLESTEROL 185 mg/dl** இற்குக் கீழ், **L.D.L - 115 mg/dl** இற்குக் கீழ், **TRIGLYCERIDE 150 mg/dl** இற்குக் கீழ், **H.D.L - 46 mg/dl** இற்கு மேல். இந்த அளவுகளைப் பேணுங்கள். **LOVING, DISCUSING, FORGIVING, THANKS GIVING** என்ற நான்கு தூண்களையும் நன்கு பராமரித்துக் குடும்பத்தில் நல்லுறவு பேணுங்கள். சுவையற்ற உணவு **(SPATAN DIET)** உண்டு இரசனையற்ற வாழ்க்கை **(SPARTAN LIFE)** வாழ்கிறோம் எனச் சலிப்படையாதீர்கள். நாவை அடக்கக் கற்றுக்கொள்ளுங்கள். கோபம் ஏற்படாத சுபாவத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.சண்டை தவிருங்கள். சகிப்புத் தன்மையுடன் வாழுங்கள். பாத ஆணிகளை **(CORNS)** சவர அலகினால் வெட்டாதீர்கள். நீங்கள் எவ்வளவு பொருள் ஈட்டினீர்கள் என்பதைக் கணக்கிடுவதைவிட, நீங்கள் ஈட்டிய பொருள் நல்லவழியில் செலவிடப்பட்டதா? பலர் பலனடைந்தார்களா? எனச் சிந்தியுங்கள். பிறருக்கு உதவுங்கள். உங்களிடம் உதவி பெற்றவர்கள் உங்களை வாழ்த்துவார்கள். அவர்களது வாழ்த்துக்கள் உங்கள் உடலாரோக்கியத்தை மேம்படுத்தும். யாவும் நன்மைக்கே என **(BE OPTIMESTIC)** எண்ணுங்கள். தியானம் செய்யுங்கள். வீட்டிலிருந்தவாறு கடவுளை வழிபடுங்கள்.

'சேராத இடந்தனில் சேரவேண்டாம்', 'மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்' என்ற அறிவுரைகளை மனதில் பதித்துக்கொள்ளுங்கள்.

திருவள்ளுவர் மருந்து என்ற அதிகாரத்தில் கூறியுள்ள, பின்வரும் குறள்களை மனதில் நிறுத்துங்கள்.

அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து.

மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபவ டில்லை உயிர்க்கு.

இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய்.

*நீங்கள் மகிழ்ச்சியுடன் பல்லாண்டு வாழலாம்.* (முற்றும்.)


நமது ஈழநாடு வழங்கும்




# உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

MEGA பரிசுப் போட்டி

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்:

சுசுகி ரேடர்ஸ்

(இரத்தின கோபால்ஸின் இணைந்த நிறுவனம்)

59,61 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

TVS மோட்டார் சைக்கிளின் யாழ்ப்பாண விற்பனை முகவர்

இரண்டாம் பரிசு - 15,000

வழங்குவோர்:

1. ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்

YONEX MULTI PALACE

விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்.

76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

2. சமுத்திரா ரேட்ஸ் (லிமிட்டட்)

டீசல் என்ஜின், நெல் குற்றும், மா அரைக்கும் இயந்திரங்கள், உதிரிப்பாக விற்பனையாளர்கள்.

3/2 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

மூன்றாம் பரிசு - 10,000 சந்தியா மல்ரிகோட்யாட்

வழங்குவோர்:

531, பருத்தித்துறை வீதி, நல்லூர். பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

Fancy goods, gift items, fevicryl & acron paint items.



இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்!
வினாக்கொத்துக்கு விடை தந்து பரிசுகளை
அள்ளிச் செல்லுங்கள்!!

## உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

### வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது? (.....................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது? (.....................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன? (.....................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயகனாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்? (.....................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது? (.....................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை ஒரே வகையில் பூர்த்தி செய்து, நாளைக்கு முன்பாக -

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.

பெயர்: ---------------------------------

வயது: ---------------------------------

முகவரி: ---------------------------------




*சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்ட சாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.*

*போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.*

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை




[புதிய படத்திட்டத்திற்கு அமைவானது]

(1) கீழே தரப்பட்டுள்ள விளம்பரத்தை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

## விளம்பரம்

**சைவ உணவு உண்போர் இரும்புச்சத்தினை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம்?**

**இறைச்சி, மீன் போன்ற அசைவ உணவுகளில் இரும்புச்சத்து நிறைந்திருப்பதுடன், ஏனைய உணவுகளிலிருந்து இரும்புச்சத்தை உறிஞ்சுவதற்கும் அவை உதவுகின்றன. ஆகவேதான் சைவ உணவு மட்டும் உண்போருக்கு இரத்தச்சோகை உண்டாகும் அபாயம் பொதுவாக அதிகம். சோயாவிலுள்ள இரும்புச்சத்து, ஏனைய காய்கறிகளிலுள்ள இரும்புச்சத்தை விடச் சிறப்பாக உடம்பில் சேர்கின்றது. இரும்புச் சத்துள்ள உணவுகளை நீங்கள் தவிர்க்கும் பட்சத்தில் உங்கள் உடம்புக்கு இரும்புச்சத்தைப் பெற்றுக்கொள்ளும் வேறுவழி வகைகளை மேற்கொள்ளுங்கள்.**

**வாழ்க்கைக்கு இரும்புச்சத்து அத்தியாவசியம்;**

**அதனைப் போதுமானளவில் உட்கொள்ளுங்கள்.**

**தகவல்:-**

*சுகாதார, சுதேச வைத்தியத்துறை அமைச்சு,*
*திட்டச்செயற்படுத்துகை பாராளுமன்ற விவகார அமைச்சு.*

(1) எந்த உணவுகளில் இரும்புச்சத்து இருப்பதாக இவ்விளம்பரத்தில் கூறப்பட்டுள்ளது?

(2) இரும்புச்சத்து இல்லாவிட்டால் எந்த நோய் ஏற்படும்?

(3) சைவ உணவு உண்போர் எந்த உணவை உண்டால், இரும்புச்சத்தைப் பெறலாம் என்று விளம்பரத்தில் கூறப்பட்டுள்ளது?

(4) இவ்விளம்பரத்தை வெளியிட்டவர்கள் யார்?

(5) இந்த விளம்பரத்திலுள்ள விசயங்களைச் சுருக்கிப் புரியக்கூடிய வகையில் எழுதப் பட்ட வாக்கியம் இவ்விளம்பரத்தில் உள்ளது. அவ்வாக்கியத்தை எழுதுக?

(6) பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை எழுதுக.
(1) இறைச்சி..........................................
(2) மீன்..........................................
(3) உடல்..........................................
(4) உணவு..........................................
(5) காய்கறி..........................................
(6) அபாயம்..........................................

(7) இவ்விளம்பரத்திலுள்ள வினைச்சொற்கள் இரண்டை எழுதுக.
(1).......................................... (2)..........................................

(8) இவ்விளம்பரத்திலுள்ள பெயர்ச் சொற்கள் இரண்டை எழுதுக.
(1).......................................... (2)..........................................

02. சங்கர் பொருட்கள் வாங்குவதற்காகச் சந்தைக்குச் சென்றான். சந்தையில் ஒரு கிலோ ஒட்டி மீனின் விலை ரூ.110 எனவும், அரைக்கிலோ ஆட்டிறைச்சியின் விலை ரூ.150 எனவும், 200 கிராம் சோயாப் பைக்கற் ஒன்றின் விலை ரூ.32.50 எனவும் அறிந்துகொண்டான்.

(1) சங்கர் இரண்டு கிலோ ஒட்டி மீனையும், ஒரு கிலோ ஆட்டிறைச்சியும் வாங்க வேண்டுமானால் எவ்வளவு பணம் தேவை?
(........................)

(2) சங்கர் அரைக்கிலோ ஒட்டி மீனையும், இரண்டு பைக்கற் சோயாவும் வாங்க வேண்டுமானால் எவ்வளவு பணம் தேவை?
(........................)

(3) சங்கரிடம் இருநூறு ரூபா உள்ளது. அவன் ஒரு கிலோ ஒட்டி மீனையும், ஒரு சோயா பைக்கற்றையும் வாங்கிய பின் அவனிடமிருக்கும் மீதிப்பணம் எவ்வளவு?
(........................)

(4) சங்கர் சைவ உணவை மட்டுமே உண்பவன் என்றால், சந்தையில் என்ன பொருளை வாங்குவான்?
(........................)

(5) சங்கரிடம் 50 ரூபா மட்டுமே உள்ளது. அவன் ஒரு சோயாப் பைக்கற் வாங்கினால் அவனுக்கு மீதிப்பணமாக எவ்வளவு கிடைக்கும்?
(........................)

(6) பின்வரும் எண்களை எழுத்தில் எழுதுக.
(1) 110 :- ..........................................
(2) 150 :- ..........................................
(3) 32 :- ..........................................

03. கீழே தரப்பட்டுள்ள பந்தியிலுள்ள வெற்றிடங்களைக் கட்டத்திற்குள் உள்ள சொற்களிலிருந்து தெரிவுசெய்து பூர்த்தி செய்க.

நகரங்கள், பாரி, வாகனத்திலேறிக், சிற்றூர்கள், தசரதன், தேரிலேறிக், நல்லவர், பிடிப்பதற்கு, வள்ளல், படர்வதற்கு, வளர்வதற்கு, கர்ணன்.

இந்தியாவிலே பறம்பு என்னும் மலைநாடு உண்டு. அந்நாட்டை (1).............................. என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவன் நீதி தவறாதவன். அவனுடைய ஆட்சியின் கீழ் முந்நூறு (2).............................. இருந்தன. அவன் இரப்போருக்கு இல்லையென்னாது கொடுக்கும் (3).............................. அவன் மக்களிடம் மிகுந்த அன்பு வைத்திருந்தான். அதுமட்டுமன்றி தாவரங்களிடமும், பிராணிகளிடமும் இரக்கமும், அன்பும் வைத்திருந்தான். ஒருநாள் அவன், தான் (4).............................. காட்டு வழியே சென்றான். செல்லும் வழியில் செழித்து வளர்ந்த முல்லைக் கொடியைக் கண்டான். அக்கொடி பற்றிப் (5).............................. கொழுகொம்பின்றித் தவித்தது. வேகமாக வீசும் காற்றினால் அங்குமிங்கும் அசைந்தாடியது.

04. பின்வரும் பொருட்களுள் நெளியக்கூடிய பொருட்களையும், நொருங்கக்கூடிய பொருட் களையும் வெவ்வேறாக வகைப்படுத்துக.

ஊசி, கம்பி, மரம், கரித்துண்டு, நாணயம், தேங்காய்ச் சிரட்டை, தகரப்பேணி, தகரமூடி, பீங்கான், கண்ணாடித்துண்டு.

| நெளியக்கூடிய பொருட்கள் | நொருங்கக்கூடிய பொருட்கள். |
|---|---|
| .............................. | .............................. |
| .............................. | .............................. |
| .............................. | .............................. |
| .............................. | .............................. |
| .............................. | .............................. |


05. "நான் ஒரு கிரிக்கெட் வீரரானால்".............................. என்ற தலைப்பில் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்த பட்சம் நான்கு சொற்களையாவது கொண் டிருத்தல் வேண்டும்.

(1)..................................................................
(2)..................................................................
(3)..................................................................
(4)..................................................................
(5)..................................................................
(6)..................................................................

(தொடரும்....)

## வி.என்.எஸ்.உதயச்சந்திரன்

B.A. (Cey) B.Ed(Hons) Dip.in.Ed.
(ஆசிரியர், கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி)



## க.பொ.த.உயர்தர பொதுச்சாதாரணப் பரீட்சையை (C.G.T) இலகுவாக எதிர்கொள்வது எவ்வாறு?

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

**(2). தகவல்களை யாதாயினும் ஒரு விதத்தில் சேர்த்து சந்தர்ப்பங்களை மீளக் கட்டமைத்தல் -**

**பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எடுத்துரைக்கப்படும் எல்லாயோசனைகளும், பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தக் கூடியதாக இருக்கின்றபோதிலும் அவற்றுள் ஒன்று மேலும் பொருத்தமாக இருக்கும்.**

**உ+ம் :- இடியுடன் கூடிய மழையின்போது கடுகதிப்பேருந்து ஒன்றின் சாரதி எதிர்ப் பக்கத்தில் இருந்துவந்த கார் ஒன்றுடன் மோதுவதைத் தவிர்ப்பதற்காகச் சடுதியாகத் தடுப்புக்களைப் பிரயோகித்தார். அப்போது பேருந்துச் சில்லுகள் வழுக்க, வீதியோரத்தில் இருந்த சுவருடன் மோதியது. பின்வருவனவற்றுள் எது இவ்விபத்துக்கு மிகப்பொருத்தமாக இருக்கும்.**

**1. பேருந்தின் தேய்ந்த ரயர்கள்**
**2. தடுப்புக்கள் மிகையாகப் பிரயோகிக்கப்பட்டமை.**
**3. பேருந்தில் குறைந்த எண்ணிக்கையான ப்யணிகள் இருந்தமை.**
**4. விபத்து நடந்த நேரத்தில் மழை பெய்தமை.**
**5. வீதியின் வழுக்கல் தன்மையும்.**

**(03). பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவும் ஒப்புவமைகளை அல்லது ஒத்த தகவல்களை, ஒத்த சந்தர்ப்பங்களில் இனங்காணல் -**

**எடுத்துரைக்கப்படும் அல்லது சேகரிக்கப்படும் தகவல்களிடையே சில மாத்திரம் பிரச்சினையைத் தீர்க்கப் பொருத்தமாக இருக்கும். அதேவேளை, மற்றைய தகவல்கள் பிரச்சினையைத் தீர்க்க பொருத்தமானவையாக இருக்கமாட்டா.**

**உ+ம்:- தரப்பட்டுள்ள ஐந்துசோடிச் சொற்களிலும் நான்கிற்கிடையே பொதுத் தொடர்புடைமை உண்டு. ஒரு சோடியில் அத்தகைய தொடர்புடைமை காணப்படமாட்டாது. அச்சோடியைத் தெரிவுசெய்க.**

**1. காலம் : செக்கன்**
**2. கனவளவு : லீற்றர்**
**3. நீளம் : மீற்றர்**
**4. அமுக்கம் : பாரமானி**
**5. நிறை : கிராம் -**

*ஆக்கியோர்:-* P.கமல்தாஸன் B.A, Spl.Trd com, Dip in Ngt (OUSL)
P.உமாசங்கர் B.Com, Spl.Trd com C.B.F (LON)

# கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர) மாதிரிப் பரீட்சை - 2003



## கணக்கீடு - 01

(3 மணித்தியாலம்)

### 1ஆம் வினா உட்பட ஐந்து வினாவிற்கு மட்டும் விடைதருக

01. அ) பின்வரும் பங்குடமைக் கணக்குகள் விடயம் தொடர்பில் பங்குடமை ஒப்பந்தம் எவ்வாறு அமையவேண்டும்?
   I. பங்காளரின் நடைமுறைக் கணக்கில் வாடகை என ஒவ்வொருவருக்கும் ரூ.3000 செலவு வைக்கப்பட்டது.
   II. A,B எனும் பங்காளரின் மூலதனம் முறையே ரூபா 200,000, ரூபா 100,000 ஆக அமையும்போது மூலதன வட்டியாக நடைமுறைக் கணக்கில் முறையே ரூபா 24,000, ரூபா 12,000 எனச் செலவு வைக்கப்பட்டது.
   III. பங்காளர் நடைமுறைக் கணக்கில் இலாபம் எனச் சமதொகை பிரிக்கப்பட்டிருந்தது.
   IV. பங்காளர் நடைமுறைக் கணக்கில் பற்றுவட்டி ரூபா 6000 என வரவு வைக்கப்பட்டிருந்தது.

(04 புள்ளிகள்)

ஆ) I. பங்குடமை ஒன்றின் நன்மதிப்பு கணிக்கப்படும் சந்தர்ப்பங்கள் எவை?
   II. நன்மதிப்புக் கணிப்பீட்டில் தேறிய இலாபத்தினை மூலதனமாக்கல் முறையையும், மிகை இலாபத்தினை மூலதனமாக்கல் முறையையும் வேறுபடுத்துக?

(08 புள்ளிகள்)

இ) இலாப நட்டங்களை 3:1 எனும் விகிதத்தில் பகிருகின்ற சேரன், சோழன் பங்குடமையால் பாண்டியன் இலாப நட்டத்தில் 25% பெறும் நோக்குடன் புதியவராகச் சேர்க்கப்பட்டார்.
   I. புதிய பங்காளன் சேர்ந்தபின் அவர்களிடையிலான இலாப நட்ட விகிதம் என்ன?
   II. புதிய பங்காளன் சேர்ந்ததன் பின்னர் அவர்களிற்கிடையிலான இலாப நட்ட வீதம் என்ன?

(08 புள்ளிகள்)

ஈ) இலாப நட்டங்களை 5:3 எனும் விகிதத்தில் பகிருகின்ற கஜன், சில்வா பங்குடமையின் ஒப்பந்தம் வருமாறு.
   I. நிலையான மூலதனத்திற்கு 15% வட்டி கணிக்கப்படும்
   II. வருடாந்த சம்பளம் முறையே ரூபா 5000, ரூபா 6000.
   III. பற்றுக்களிற்கு 10% உண்டு.

மேற்படி பங்குடமையில் புதியவராக 1-3-2002 இல் சுமித் சேர்க்கப்பட்டார். அவர் சேர்ந்ததன் பின்னர் 1890 பங்குடமைச் சட்டத்தின் 24 ஆவது பிரிவைப் பின்பற்றுவது எனப் பங்காளர் இணங்கிக்கொண்டனர்.

*பங்குடமையின் 31-12-2002 இல் பரீட்சை மீதி வருமாறு*

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| ஆரம்பஇருப்பு | 10,000 | |
| நிலையச்செலவு | 6,000 | |
| நிர்வாகச்செலவு | 3,000 | |
| விற்பனை | | 380,000 |
| கொள்வனவு | 150,000 | |
| கடன்படுநர் | 6,000 | |
| கடன் கொடுநர் | | 3,500 |
| அறவிடமுடியாக்கடன் | 3,000 | |
| ஐயக்கடன்ஏற்பாடு | | 2,000 |
| உட்திரும்பல் | 1,000 | |
| வெளித்திரும்பல் | | 1,500 |
| காப்புறுதி | 2,000 | |
| மின்கட்டணம் | 1,200 | |
| பெற்றதரகு | | 500 |
| பெற்ற முதலீட்டுவருமானம் | | 7,500 |
| சில்லறைச்செலவு | 5,000 | |
| நிலையானசொத்து | 500,000 | |
| போக்குவரத்துக்கட்டணம் | 10,000 | |
| தொங்கல் | 2,000 | |
| 5% வங்கிக்கடன் | | 80,000 |
| வருமதி உண்டியல் | 15,000 | |
| சென்மதி உண்டியல் | | 20,000 |
| பங்காளர் மூலதனக்கணக்கு | | |
| கஜன் | | 300,000 |
| சில்வா | | 250,000 |
| சுமித் | | 100,000 |
| காசுமீதி | 430,800 | |
| மொத்தம் | 1,145,000 | 1,145,000 |

மேலதிக தகவல்கள்
   I. 01-03-02 இல் இருப்பு ரூ.15,000 31-12-02 இல் இருப்பு ரூ.20,000.
   II. விற்பனைகள் 01-03-02 வரை 40% உம் 31-12-02 வரை 60% பிரிக்கப்படல் வேண்டும்.
   III. அனைத்து வருமானம், செலவுக்கும் கால அடிப்படையில் அட்டுரு அடிப்படையிலும் எழுந்தன.
   IV. நிலையான சொத்துக்களின் பகுப்பாய்வு வருமாறு.

| | கொள்விலை | திரண்டபெறுமானத் தேர்வு ஏற்பாடு |
|---|---|---|
| காணி கட்டடம் | 300,000 | 120,000 |
| மோட்டார்வாகனம் | 150,000 | 60,000 |
| தளபாடம் | 50,000 | 20,000 |

   V. நிலையான சொத்துக்களிற்குப் பின்வருமாறு தேய்விடுக.
      காணி கட்டடம் 20%
      மோட்டார்வாகனம் 10%
      தளபாடம் 8%
   VI. பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் தொங்கல் கணக்கு ஏடுகளிலிருந்து நீக்கப்பட்டது.
      - கொள்வனவு நாளேட்டைக் கூட்டும்போது ரூபா 1,200 தவறுதலாகக் கூட்டிக் காட்டப்பட்டது.
      - மின் கட்டணம் ரூபா 800 மின் கட்டணக் கணக்கில் பதியப்படவில்லை.
   VII. வருமதி உண்டியலில் ரூபா 10,000 பெறுமதியான உண்டியல் முதிர்வடைந்தது. உடனடியாகப் பணம் பெறப்பட்டது. அத்துடன் மிகுதி உண்டியல் (03 மாத முதிர்ச்சி) 24% கழிவில் பணமாக்கப்பட்டது.
   VIII. பங்காளர் பற்றிய பின்வரும் காசுத்தொகை ஏடுகளில் பதியப்படவில்லை.
      கஜன் 25,000/=
      சில்வா 15,000/=
      சுமித் 5,000/=

மேற்படி பங்குடமையின் 31-12-02 இல் முடிவடைந்த ஆண்டுக்கான முடிவுக் கணக்குகளைத் தயாரிக்கும்படி வேண்டப்படுகின்றீர்.

(16புள்ளிகள்)
(மொத்தம் 36புள்ளிகள்)

02. (அ) மேரி வியாபாரநிறுவனத்தின் எழுந்த கொடுக்கல் வாங்கல்களின் கணக்கீட்டுச் சமன்பாடு கீழே தரப்பட்டுள்ளது. இக்கொடுக்கல் வாங்கல்களை விபரிக்குமாறு வேண்டப்படுகின்றீர்.

*குறிப்பு:- (உரிமையாளர் மேலதிக மூலதனத்தையோ, பற்றையோ காசாக மேற்கொள்ளவில்லை).*

| சொத்துக்கள் | உரிமையாளர் மூலதனம் | பொறுப்பு |
|---|---|---|
| i. அதிகரிப்பு | அதிகரிப்பு | - |
| ii. அதிகரிப்பு | - | அதிகரிப்பு |
| iii. குறைவடையும் | குறைவடைதல் | - |
| vi. குறைவடையும் | - | குறைவடையும் |
| v. மாற்றமில்லை | அதிகரிக்கும் | குறைவடையும் |

(05 புள்ளிகள்)

(ஆ) சில கொடுக்கல் வாங்கல் இருப்பின் மீதும் தேறிய இலாபத்தின் மீதும் பின்வருமாறு விளைவுகளை ஏற்படுத்தின. கொடுக்கல் வாங்கல்களை விபரிக்க.

| இருப்பு விளைவு | தொகை | தேறிய விளைவு | இலாபம் தொகை |
|---|---|---|---|
| i. அதிகரிக்கும் | 15,000 | மாற்றமில்லை | - |
| ii. குறைவடையும் | 20,000 | அதிகரிக்கும் | 5,000 |
| iii. குறைவடையும் | 10,000 | மாற்றமில்லை | - |
| iv. குறைவடையும் | 20,000 | குறையும் | 20,000 |
| v. அதிகரிக்கும் | 10,000 | குறையும் | 5,000 |

(05 புள்ளிகள்)

இ) தாமரை அன்கோ வியாபார நிலையத்தில் 2002 டிசம்பர் 31 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை இணங்கவில்லை. காரணம் பின்வருமாறு.
   i. அனுமதித்த கழிவீடான ரூ.800 நபர் கணக்கில் சரியாகப் பதியப்பட்டபோதிலும், பெற்ற வாடகைக் கணக்கில் பதியப்பட்டுள்ளது.
   ii. மாதமொன்றிற்கு ரூ.1000 செலுத்தவேண்டிய ஊழியர் சம்பளம் மொத்தத்தொகைக்குப் பதிவு ஏதும் இடம்பெறவில்லை.
   iii. கடன் கொடுத்தோருக்கு வரைந்து கொடுத்த காசோலை ரூ.6000 வங்கிக் கணக்கில் மட்டும் பதியப்பட்டுள்ளது.
   iv. வங்கி வரைபில் ரூ.6,500 இலங்கை வங்கியினுடையது எனத் தெரியவந்ததும், பரீட்சைமீதிக்கு எடுத்துச் செலலப்படவில்லை.

   உம்மிடம் வேண்டப்படுவது
   i. வழுக்களைத் திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவு.
   ii. தொங்கல் கணக்கு.

(06 புள்ளிகள்) (மொத்தம் 16 புள்ளிகள்)

03. (அ) பின்வரும் எண்ணக்கருக்களின் அடிப்படையான கருத்தினைத் தெளிவுபடுத்தி நிதிக் கூற்றில் தோன்றும் விளைவு ஒன்றையாவது குறிப்பிடுக.
   i. தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு
   ii. அட்டுறு எண்ணக்கரு
   iii. மாறா எண்ணக்கரு
   iv. முக்கியத்துவ எண்ணக்கரு
   v. நுன்மதி எண்ணக்கரு

(10 புள்ளிகள்)

(ஆ) கணக்கீட்டு நியமனங்களின் அனுகூலம், பிரதிகூலம் எவையெனக் குறிப்பிடுக.

(06 புள்ளிகள்)
(மொத்தம் 16 புள்ளிகள்)

04. (அ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் (SLAS-05) ஐந்திற்கு அமையப் பின்வரும் பதங்களை விளக்குக.
   i. இருப்பு மதிப்பீடு
   ii. தேறிய நிகரப் பெறுமதி
   iii. இருப்பு கிரயம்

(08 புள்ளிகள்)

(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் - 08 (SLAS-08) அமையப் பின்வரும் பதங்களை விளக்குக.
   i. சொத்தின் இறுதிப்பெறுமதி
   ii. நிர்ணயிக்கப்பட்ட பொருளியல் ஆயுட்காலம்.
   iii. சொத்தின் கிரயம்

(03 புள்ளிகள்)

(இ) காணிக்கு ஏன் பெறுமானத் தேய்வு செய்வதில்லை என விளக்குக.

(05 புள்ளிகள்) (மொத்தம் 16 புள்ளிகள்)

05. (அ) பின்வரும் உருப்படிகளில் எவை மூலதனச்செலவு, வருமானச்செலவு, பிற்போடப்பட்ட வருமானச்செலவு என இணங்காண்க.
   i. கட்டடத்திற்கு வர்ணம் பூசுவதற்கான செலவு.
   ii. தொடக்கச்செலவு.
   iii. நிறுவனமொன்றிற்கு ஏற்பட்ட பாரிய விளம்பரச்செலவு.
   iv. பொறி ஒன்றின் செயற்திறனை அதிகரிப்பதற்கான செலவு.
   v. பயன்படுத்திய பின் கார் ஒன்றுக்கான பழுது பார்த்தல் செலவு.

(05 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் தகவல்களைக் கொண்டு கட்டுப்பாட்டுக் கணக்குகளைத் தயாரிக்கும்படி வேண்டப்படுகின்றீர்.

**2001 ஜனவரி 01 இல் திகதி**

| | |
|---|---|
| கடன்பட்டோர் வரவு | 50,000 |
| கடன்பட்டோர் செலவு | 5,000 |
| கடன்கொடுத்தோர் மீது செலவு | 16,000 |
| கடன்கொடுத்தோர் வரவு | 3,000 |
| கடன் கொள்வனவு | 75,000 |
| கடன் விற்பனை | 150,000 |

**2001 டிசம்பர் 31 ஆம் திகதி**

| | |
|---|---|
| கடன்பட்டோர் செலவு | 4,000 |
| கடன்கொடுத்தோர் வரவு | 3,000 |
| உட்திருப்பம் | 5,000 |
| வெளித்திருப்பம் | 3,000 |
| பெற்ற காசு | 25,000 |
| கொடுத்த காசோலை | 6,000 |
| கொடுத்த காசு | 15,000 |
| எதிர் தீர்த்தல் | 7,500 |

(11 புள்ளிகள்) (மொத்தம் 16 புள்ளிகள்)


06. (அ) நிகழ்மாத வங்கிக்கூற்றிலே சென்ற (முதல்) மாதவங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் தகவல் அடங்கியிருந்தது. அது எத்தகவலாக இருக்கமுடியும்.

(02 புள்ளிகள்)

ஆ) நிரோஸ் வியாபார நிறுவனத்தின் 31 டிசம்பர் 2002 இல் தயாரிக்கப்பட்ட காசேட்டின் வங்கி மீதி ரூ.16,000 காட்டியபோது இம்மீதி வங்கிக்கூற்று மீதியுடன் இணங்கவில்லை. காரணத்தைத் தேடிய கணக்குப் பதிவாளர் பின்வரும் தகவலைத் தந்துள்ளார்.
   i. நிலையான கட்டளையின் பெயரில் கொடுப்பனவு ரூ. 3,200 (மின்கட்டணம்) காசேட்டில் பதியப்படவில்லை.
   ii. லதா என்வரின் நிறுவனம் வரைந்து கொடுத்த காசோலைகள் இரண்டு ch.05524 இலக்கமுடைய ரூ. 3,000, ch.035 6402 இலக்கமுடைய ரூ.1,000 காசோலையில் ch.05524 இலக்கமுடைய காசோலை 3 டிசம்பர் 2002 இல் பணமாக்கப்பட்டது. ch.035 6402 இலக்கமுடைய காசோலை 6 ஜனவரி 2003 இல் பணமாக்கப்பட்டது.
   iii. வசூலிக்கப்படாத காசோலை
      ch. 05 - 5,000.00
      ch. 06 - 3,000.00
      ch. 50 - 7,500.00
      15,500.00
   iv. வங்கிக்கட்டணம் ரூ.1,000, காசோலைப் புத்தகக் கட்டணக் கணக்கு ரூ.5000, வங்கி வசூலிப்பதற்கு இலாபம் ரூ.600 உம் காசேட்டில் பதியப்படவில்லை. மேற்படி தகவலிலிருந்து
   i. செம்மையாக்கிய காசேட்டைச் செய்க.
   ii. வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்க.

(14 புள்ளிகள்) (மொத்தம் 16 புள்ளிகள்)

மு. சிவப்பிரகாசம்
B.B.A (SP),
கிளி/அக்கராயன்
மகாவித்தியாலயம்,
கிளிநொச்சி.



நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

செறுவார்க்குச் சேண்இகலா இன்பம் அறிவுஇலா
அஞ்சும் பகைவர்ப் பெறின்.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## ஊடுருவலும் ஊக்குவிப்பும்!

இலங்கைக் கடற்பரப்பினுள் ஊடுருவி, அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் இந்திய மீனவர்களுக்கும், உள்ளூர் மீனவர்களுக்கும் இடையே பேசாலைக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் மாலை பெரும் கைகலப்பொன்று நடைபெற்றுள்ளது.

பேசாலைக் கடற்பிராந்தியத்தில் நடந்த இம் மோதலில் - இரண்டு தரப்பினருமே பயங்கரமாக மோதிக்கொண்டதில் - இரு தரப்பிலுமாக இருபதுக்கும் அதிகமானோர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இந்தக் கலவரம் - இலங்கை, இந்திய மீனவரிடையே பதற்றத்தை அதிகரித்திருப்பதோடு - மீண்டும், மீண்டும் இவ்வாறான மோதல்கள் வெடிக்கலாம் என்ற அச்சுறுத்தலையும் ஏற்படுத்தியிருக்கிறது.

ஏற்கனவே - கடற்படையினரின் கெடுபிடிகளாலும், தாக்குதல்களாலும் பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கும் உள்ளூர் மீனவர்கள் -

ஊடுருவி அத்துமீறலில் ஈடுபட்டு அடாவடித்தனம் புரியும் இந்திய மீனவர்களால் பாதிக்கப்படுவதனதும் -

உள்ளூர் மீனவர்களுக்கே உரித்தான கடல்வளம் கொள்ளையிடப்படுவதனதும் எதிரொலியாக - இந்தச் சம்பவம் நடைபெற்றிருப்பதாகத் தெரியவருகின்றது.

இந்திய மீனவர்கள் - இலங்கைக் கடற்பரப்பினுள் ஊடுருவுவதும், உள்ளூர் மீனவர்களது படகுகளைத் தாக்குவதும், வலைகளை அறுத்தெறிவதும் தனியே மன்னார் வளைகுடாவில் மட்டுமன்றி, வடபாலுள்ள கடற்பகுதிகள் எங்கனும் தினந்தினம் நடக்கும் நிகழ்வாகவே தற்போது அரங்கேறிவருகின்றது.

யுத்தச் சூழ்நிலையிலும், கடற்படையின் கெடுபிடிகளாலும், தாக்குதல் அச்சத்தாலும் - உள்ளூர் மீனவர்கள் - தமது கடற்பகுதிக்குள்ளேயே ஆழமாகச் சென்று மீன்பிடியில் ஈடுபடாத நிலைக்குள் கட்டுண்டிருப்பதைச் சாட்டாக வைத்துக்கொண்டு, இந்திய மீனவர்களால் எமக்குரிய கடல்வளம் பெருமளவில் அடாத்தாகப் பறித்தெடுக்கப்பட்டு வந்தது.

இதனைத் தடுக்க வேண்டிய பொறுப்பிலுள்ள கடற்படையோ - இந்திய மீனவர்கள் ட்ரோலர்களில் இலங்கைக் கடற்பகுதிக்குள் நுழைவதைக் 'கண்டும் காணாமலும்' விட்டுக்கொண்டு - உள்ளூர் மீனவர்களின் படகுகளைத் தமது அதிவேகப் படகுகளால் தாக்கி மூழ்கடித்தும், மீனவர்களை சகட்டு மேனிக்குத் தாக்கியும் கொடுஞ்செயலைத் தொடர்ந்து வந்தனர்.

போர் நடைபெற்ற காலம் என்று மட்டுமல்ல - போர் நிறுத்தம் கைச்சாத்தாகிய பின்னரும் கூட கடற்படையினரின் இத்தகைய அடாவடித்தனங்கள் - தொடர்கதையாகி கடற்தொழிலாளரின் வயிற்றிலடிக்கும் கதை நீடித்தே வருகின்றது.

கடற்படையினரின் இந்த அச்சுறுத்தலை, தமக்குச் சாதகமாக்கிக் கொண்ட இந்திய மீனவர்கள் - இன்னமும் துணிவுடனும், கேட்பார் ஏவருமில்லை என்ற திமிர்த்தனத்துடனும், இலங்கைக் கடற்பகுதிக்குள் சுதந்திரமாக நுழைந்து தமது திருட்டை நடத்தி வந்ததை உள்ளூர் கடற்தொழிலாளர்கள் மனங்கொள்ளா வேதனையுடன் சுட்டிக்காட்டி வந்தனர்.

இதுபற்றி அரசாங்கத்திடமும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடமும், மனிதஉரிமை அமைப்புக்களிடமும் மீனவர்கள் முறையிட்டபோதும் - அது கருத்திலெடுக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக எதுவுமே தெரியவரவில்லை.

ஒரு நிலையில் இந்திய மீனவர்களிடம் 'தரகு' பெற்றுக்கொண்டோ, அல்லது இந்திய மீனவர்களைத் தமது கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கான கருவிகளாகப் பயன்படுத்தும் நோக்குடனோ - கடற்படையினரே இந்த அத்துமீறல்களை ஊக்குவித்து வருவதாகவும் உள்ளூர் மீனவர்கள் தரப்பில் குற்றஞ் சாட்டப்படுகின்றது.

இவை மட்டுமல்லாமல் - உள்ளூர் மீனவர்கள் மீதான தாக்குதலுக்கும், கடல்வளத் திருட்டுக்கும் - தமிழர் விரோதப் போக்கை மன்திற் கொண்டு கடற்படையினரே பல சமயங்களில் வழிசமைத்துக் கொடுப்பதாகவும் சாடப்படுகின்றது.

அதேவேளை - இந்திய அதிகாரிகளோ, கடலோரக் கடற் படையினரோ இந்த விவகாரத்தில் தமது நாட்டு மீனவர்களின் போக்கினைக் கட்டுப்படுத்துவதற்கான எந்த முயற்சிகளிலும் இறங்குவதாகத் தெரியவில்லை.

அவர்களது கண்முன்னாலேயே - இந்தியக் கடல் எல்லையைக் கடந்து அத்துமீறல் நடந்துவருவதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

இந்தவகையில் - இந்திய மீனவர்களும், இந்திய அதிகாரிகளும் கடலோரக் கடற்படையினரும், இலங்கைக் கடற்படையினருமே - பேசாலை சம்பவத்துக்கு மூலகாரணம் என்பதுடன்,

தொடர்ந்து இதுபோன்ற அத்துமீறல்களும், ஊக்குவிப்புக்களும் நிகழ்ந்து கொண்டே இருக்குமானால் - அது நிலைமையை மேலும் சிக்கலாக்கிவிடும் என்பதையும் சுட்டிக்காட்டவே வேண்டியிருக்கிறது.

# போகிற போக்கில்......

**கொழும்பிலிருந்து உதரன்**

நான் கொட்டாஞ்சேனையிலிருந்து 102 ஆம் இலக்கப் பேருந்தில் வெள்ளவத்தையை நோக்கிப் பயணம் செய்தேன். நானிருந்த ஆசனத்திற்கு முன்னால் மூன்று இருக்கைகளில் ஆறுபேர் அமர்ந்திருந்தனர். அவர்களில் மூன்று பேர் பெண்கள், ஏனைய மூன்று பேரும் ஆண்கள். அவர்களில் ஒருவருக்கு 35 வயதிருக்கும், மற்றவருக்கு 60 வயதிருக்கும், மூன்றாவது நபருடைய வயதைச் சரியாகச் சொல்லமுடியாது. தலைமுடி கறுப்பாக இருந்தது. கூர்ந்து நோக்கியபோதுதான் தலைக்கு டை அடித்திருப்பது தெரிந்தது. டை வந்துவிட்டதால் முதியவர்களும் இளைஞர்களாகிவிட்டார்கள்.

இவர்களைப்பற்றிச் சொல்வதற்கு முதல், 102 ஆம் இலக்கப் பேருந்தைப் பற்றிய சுவாரசியமான விசயங்களைச் சொல்லி விடுகின்றேன்.

யுத்தகாலத்தில் இராணுவத்தினராலும், பொலிஸாராலும், கடற்படையினராலும் இந்தப்பேருந்து சோதனைகளுக்கு உள்ளாகத் தவறுவதில்லை. இந்த இலக்கப் பேருந்துகளிலிருந்து பல இளைஞர், யுவதிகளைப் படையினர் கைதுசெய்துள்ளனர். படையினர் மத்தியில் 102 என்ற இலக்கம் பிரபல்யமானது.

ஏன் என்று கேட்கின்றீர்களா?

யாழ்ப்பாணத்தவர்கள் பயணஞ்செய்வதும், கொட்டாஞ்சேனையில் இருப்பவர்கள் வெள்ளவத்தைக் கோயில்களுக்குச் செல்வதும், பயண முகவர்களிடம் செல்வதும் இந்த வண்டியில்தான். அதேபோல, வெள்ளவத்தையில் இருபபவர்கள் கொட்டாஞ்சேனையில் உள்ள கோயில்களுக்கு வருவதும், கொழும்பு - கோட்டையில் உள்ள கடைகளுக்கும், புகையிரத நிலையத்திற்கு வருவதும் இந்த வண்டியில்தான். அதுமட்டுமல்ல 102 ஆம் இலக்கப் பேருந்து வண்டியில் கடமைபுரியும் நடத்துநர்களுக்குத் தமிழ் தெரிவதால், பஸ் கட்டணத்தைச் செலுத்தி மீதிப்பணத்தை இலகுவாகப் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதால், அவர்கள் இந்த இலக்க வண்டியிலேயே பயணம் செய்வர். சிங்களத்தில் கதைப்பவர்கள் இந்த வண்டியில் ஏறுவதும் குறைவு. அத்தோடு, புரியாத சிங்களமொழியைக் கதைக்கவேண்டிய சூழ்நிலையும் அவர்களுக்கு இருக்காது.

இந்த வண்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களும் பயணம் செய்வார்கள். அது மட்டுமல்ல வெளிநாட்டுப் பணத்தில் உல்லாசமாக வாழ்க்கை நடத்தும், எந்த வேலையும் செய்யாத யாழ்ப்பாணத்து இளைஞர்களையும் இந்தப் பேருந்திலே காணலாம். அவர்கள் சேட்டின் முதல் இரண்டு பொத்தான்களையும் பொருத்துவதில்லை. ஏன் என்று தெரியுமா? வெளிநாட்டு இளைஞர்கள் இரத்தம் சிந்தி உழைத்த பணத்தில் வாங்கிய கழுத்துச் செயினை (தங்கச் சங்கிலியை) மற்றவர்கள் பார்க்க வேண்டுமல்லவா! அது மட்டுமல்ல, இளம் பெண்களும் பார்க்க வேண்டாமா? இவர்களின் சில்மிசங்களையும் இந்தப் பேருந்தில் காணலாம். சில்மிசங்களில் ஈடுபடுபவர்கள் இளைஞர்கள் மட்டுமா என்று நீங்கள் கேட்கலாம். நான் சொல்வதற்கிடையில் அவசரப்படாதீர்கள். வெளிநாட்டுப் பணம் வயது முதிந்தவர்களையும் விட்டுவைக்கவில்லை. அவர்களின் சில்மிசங்களுக்கும் அளவில்லை. ஐம்பதிலும் ஆசைவரும் என்பதை அந்தப் பேருந்து வண்டியில் ஏறினால் புரிந்துகொள்ளமுடியும்.

102 ஆம் இலக்கப் பேருந்துக்கு இன்னுமொரு சிறப்புமுண்டு. யாழ்ப்பாண ஊர்ச் செய்திகளை மட்டுமல்ல, வெளிநாட்டுச் செய்திகளையும் இலவசமாக அறிந்துகொள்ள முடியும். அத்தோடு, டொலர் இன்று என்னவிலை? கனடியன் டொலர் என்ன விலை? டொச்மார்க் என்ன விலை என்ற செய்திகளையும் இலவசமாக அறிந்து கொள்ளமுடியும். அதுமட்டுமல்ல யார் யாருக்குத் திருணம் நடந்தது. யார் யாருக்குத் திருமணம் பேசப்படுகின்றது என்ற விபரங்களைக்கூட அறிந்துகொள்ளக்கூடிய சிறப்பு அந்த பேருந்துக்கு உண்டென்றால் பாருங்களேன். உங்களுக்கு ஆசையாக இருந்தால் கொழும்பு வரும்போது இரண்டொருமுறை அந்த வண்டியில் ஏறினீர்களேயானால் இந்த உண்மைகளைக் காணவும், கேட்கவும் முடியும்.

யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் பேருந்திலோ அல்லது புகையிரதத்திலோ ஏறிவிட்டால் மெதுவாகக் கதைப்பதில்லை. உரத்துத்தான் கதைப்பார்கள். பக்கத்தில் இருப்பவர்கள் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள் என்பதையே மறந்துவிடுவார்கள். இதனால்தான், அவர்கள் கதைப்பவற்றைத் தெளிவாக மற்றவர்களால் தெரிந்துகொள்ளமுடிகின்றது.

இனி விடயத்திற்கு வருகின்றேன். பேருந்திலிருந்த ஆறு பேர்களைப் பற்றிச் சொன்னேன் அல்லவா. அவர்களில் மூவர் அரசியல் கதைத்தார்கள். ஈராக்-அமெரிக்க யுத்தம் பற்றியா கதைத்தார்கள் என்று கேட்கலாம். எம்மவர்களில் பலர் பரந்த விஷயங்கள் பற்றிக் கதைப்பதில்லையே. ஈராக்கும், அமெரிக்காவும் யுத்தம் செய்தால் அவர்களுக்கென்ன. அதன் தாக்கம் பற்றி அவர்களால் புரிந்துகொள்ளக்கூடிய அறிவு அவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. என்ன தொடர்ந்து மட்டந்தட்டியே வருகிறீர்கள் என்று என்னைப் பார்த்து முணுமுணுப்பது எனக்கும் புரியாமலில்லை. உண்மையைச் சில வேளைகளில் ஜீரணிப்பது கடினம்தான்.

தற்போதைய யுத்த நிறுத்தத்தையே தமிழர்களுக்கு உரிமை கிடைத்துவிட்டதாக நினைப்பவர்களும் நம் மத்தியிலே தானே வாழ்கிறார்கள்.

102 ஆம் இலக்க பஸ்ஸில் இருந்தவர்களில் ஒருவர் மற்றவரைப் பார்த்துக் கேட்டார். "யுத்தம் வருமா? வராதா." அதற்கு மற்றவர் சொன்னார்- "எனக்கு இந்த யுத்த நிறுத்தத்தில் நம்பிக்கையில்லை." "ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்" என்று தலைக்கு டை அடித்தவர் கேட்டார்.

"நெடுந்தீவுக் கடலில் மூன்று போராளிகள் உயிர்நீத்துக் கொண்டார்களே. அப்போதே யுத்தம் வரும் என்று எதிர் பார்த்தேன். மயிரிழையில் தப்பிவிட்டது." அதற்கு முதியவரும், "நானும் அப்படித்தான் நினைத்தேன். ஏனென்று தெரியவில்லை. பொடியன்கள் பணிந்து போய்விட்டார்கள். பொடியன்கள் ஏன் இப்படி நடந்துகொண்டார்கள் என்று எனக்கென்றால் தெரியவில்லை" என்று வேதனையுடன் கூறினார்.

தலைக்குடை அடித்தவர் சொன்னார் -

"திருகோணமலையில் புலிகளைக் கடற்படையினர் சுற்றி வளைத்தார்கள். அவர்களைப் புலிப் போராளிகள் சுற்றி வளைத்தார்கள். பிறகு கண்காணிப்புக் குழுவினரின் முயற்சியில் யுத்தம் ஏற்படுவது தவிர்க்கப்பட்டது" என்றார். அதற்கு வயது முதிர்ந்தவர் சொன்னார்- "ஏன் பொடியள் அமைதியாக இருக்கிறார்கள் என்று தெரியவில்லை" என்றார். அதற்கு மற்றவர் சொன்னார்- "நான் சொல்லுறன் வெகு விரைவில் யுத்தம் வரும்" என்றார். அதற்கு மற்றவர்- "நானும் நினைக்கிறன் யுத்தம் வரும் எண்டுதான்" என்றார்

தலைக்கு டை அடித்தவர் சொன்னார்- "ஜனாதிபதியம்மையாரும், ஜே.வி.பியும் இருக்கும்வரை பிரச்சினை தீரவே தீராது" என்று ஆணித்தரமாகச் சொன்னார்.

சிறிது நேரம் அவர்களிடையே அமைதி நிலவியது. நான் வெளியே திரும்பிப்பார்த்தேன். கோல்பேஸ் அருகில் பஸ் சென்று கொண்டிருந்தது.

இப்போதெல்லாம் கோல்பேஸை ஆக்கிரமித்து இருப்பவர்களும் நம் தமிழர்கள்தான். கோல்பேஸில் வடக்கு- கிழக்குப் பகுதிகளிலிருந்து சுற்றுலா வந்த மாணவர்களையும், பேருந்துகளையும் காணமுடிந்தது.

பேருந்துக்குள் இருந்த மூன்று பேரும் மீண்டும் உரையாடலை ஆரம்பித்தனர். "உங்கட பிள்ளைகள் எல்லாம் காசு அனுப்புகினமோ" என்று முதியவரைப் பார்த்து மற்றவர் கேட்டார். "என்ர எல்லாப் பிள்ளையளும் வெளியில்தானே. என்னையும் வரச்சொல்லி இருக்கினம். அதுக்குத்தான் கொழும்புக்கு வந்தனான்" என்றார்.

"அப்ப வீடு வாசல்களை என்ன செய்தனீங்கள்" என்று மற்றவர் கேட்டார். "நம்பிக்கையான ஆக்களிட்ட கொடுத்திட்டுத்தான் வந்தனான்" என்றார்.

வயோதிபர் சொன்னார்- "எங்கட நாட்டில பிரச்சினை தீர்ந்தா, வெளிநாட்டில இருக்கிற ஆக்கள அனுப்பிப்போடு வாங்கள் எண்டு சொல்லுறாங்கள். அதனால, வீட்ட மிகவும் நம்பிக்கையான ஆக்களிட்டதான் குடுத்திட்டு வந்தனான்" என்கிறார். அதற்கு டை அடித்தவர் சொன்னார்- "நீங்கள் பயப்படாதீங்கள். இந்தச் சமாதானம் கொஞ்ச நாளைக்குத்தான். சண்ட வந்துதான் தீரும்" என்று அடித்துச் சொன்னார்.

நான் அவர்களுடன் இருந்த மூன்று பெண்களையும் பார்த்தேன். கழுத்து முழுவதும் நகைகளாக மின்னின. இவர்கள் வெளிநாட்டுப் பணத்தில்தான் வாழ்ந்து வருகின்றார்கள் என்பது தெரிந்தது.

இவர்களுடைய கதையைக் கேட்டுக் கொண்டிருந்ததில் நான் இறங்கவேண்டிய இடத்தைத் தவறவிட்டு விட்டேன். இப்போது சொல்லுங்கள் மனிதர்கள் பலவிதம், ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதம் என்பது உண்மைதானே!

# குடாநாட்டை அடுத்து வன்னிப் பகுதிக்கான மின் விநியோகப் பணிகள் ஆரம்பிக்கப்படும்

## அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவிப்பு

இவ்வருடத்திற்குள் யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் மின்சார விநியோகம் வழங்கப்படும் என்று மின்சக்தி எரிபொருட்துறை அமைச்சர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் கிராமிய மின் திட்டங்களை ஆரம்பித்து வைத்த பின்னர், கொழும்பு திரும்பியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

குடாநாட்டில் மின்சார அபிவிருத்திக்கு 100 மில்லியன் ரூபாவை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியது. இந்நிலையைப் பயன்படுத்தியே கிராமிய மின் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் மின்சார விநியோகம் வழங்கப்படவேண்டும். இது அரசாங்கத்தின் கடமையாகும். அது மட்டுமன்றி, விரைவில் குடாநாட்டில் வீதி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

குடாநாட்டில் மின்சார விநியோகப் பணிகள் பூர்த்தியடைந்ததும் வன்னியில் - கிளிநொச்சி, முல்லைத்தீவு, பகுதிகளுக்கான மின் விநியோகத்தை வழங்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் அமைச்சர் கரு ஜெயசூரிய மேலும் தெரிவித்தார்.

# விமானப்படை அதிகாரியின் மரணம் விசாரணை செய்யக் குழு அமைப்பு!

ஹிங்குராங்கொட விமானப்படைத் தளத்தில் வைத்து விமானப்படை அதிகாரி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவரைச் சுட்டுக்கொன்றதாகச் சந்தேகிக்கப்படும் விமானப்படை வீரர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்துவதற்குக் குழுவொன்றை நியமிப்பதாக விமானப் படைத் தளபதி எயர் மார்ஷல் டொனல்ட் பெரேரா தெரிவித்தார்.

# நெருக்கடியான சூழலை எதிர்கொள்ளும் மக்களுக்கு உதவுவதே எமது கொள்கை!

**கடநத 15 ஆண்டுகளுக்கு மேலாக, மந்திகை மருத்துவமனையில் பிரான்ஸ் நாட்டு எம்.எஸ்.எவ். (MSF- MEDICINE SAND FRONTIRES) அமைப்பு சேவை யாற்றி வருகின்றது. பல நெருக்கடி மிகுந்த காலப் பகுதிகளில், இவர்கள் இந்த மருத்துவமனைக்கு ஆற்றிய சேவைகளை மக்கள் இன்றும் நினைவு கூருகின்றனர். இந்திய இராணுவம் இங்கிருந்த காலத்தில், இவர்கள் இந்த மக்களுக்கு ஆற்றிய சேவை மகத்தானது. தற்பொழுது 3 பேர் கொண்ட மருத்துக்வகுழுவினர் மந்திகை மருத்துவமனையில் தங்கள் சேவையை வழங்கிக் கொண்டிருக்கின்றனர். இங்குள்ள சத்திரசிகிச்சைப் பிரிவு முற்று முழுதாக இவர்களின் சேவையிலேயே இயங்கிக்கொண்டிருக்கிறது. அவர் களுடனான நேர்காணல் இது.**

*கேள்வி:-* தங்கள் அமைப்புப் பற்றிச் சற்று எடுத்துரைக்க முடியுமா?

*பதில்:-* MSF ஒரு பிரான்ஸ் நாட்டு மருத்துவ அமைப்பு. இது பிரான்ஸ் நாட்டு மருத்துவர்களால் ஆரம்பிக்கப் பட்டது. இது ஒரு சர்வதேச அரசு சாரா நிறுவனம். இதன் தலைமை யகம் பாரிஸ் மாநகரத்தில் அமைந் துள்ளது. எமது அமைப்பின் பிரதான நோக்கம் மருத்துவத் தொண்டர் சேவை அளிப்பதுதான். எமது 50 உறுப்பினர்கள் உலகம் முழுவதும் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு இடங்களிலும் 3 தொடக் கம் 6 மாதங்கள் வரை இவர்கள் சுழற்சிமுறையில் பணியாற்றி வரு கின்றனர்.

சிறப்பாக, எமது அமைப்பின் பிர தான நோக்கம், மிகவும் இக்கட்டான சூழ்நிலைகளில் மக்கள் எங்கெல லாம் சிக்கித்தவிக்கின்றார்களோ அங்கே சென்று அவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகளை அளிப்பதாகவே உள்ளது. அத்துடன், அந்த மக்கள் இயல்பு வாழ்க்கைக் குத் திரும்பக்கூடிய சூழ்நிலை வரும் பொழுது நாங்கள் எமது சேவையை நிறைவுசெய்துகொள்வோம்.

*கேள்வி:-* வடக்கு - கிழக்கு பிர தேசங்களில் தங்கள் பணிபற்றி?

*பதில்:-* இலங்கையில் கொழும் பைத் தலைமையகமாகக் கொண் டுள்ள எமது அமைப்பு - மட்டக் களப்பு, மடு ஆகிய இடங்களில் இயங்கிக் கொண்டிருக்கிறது. வவு னியாவிலும் முன்னர் சேவையாற் றினோம். விசேடமாக யாழ். குடா நாட்டிலும் நாங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றோம். மந்திகை மருத்துவமனையில் இன்று எல்லாச் சத்திர சிகிச்சைக்கும் பொறுப்பாக நாமே உள்ளோம். பெண் நோயியல் மகப்பேற்றுத் துறையிலும் நாம் இங்கு பணிபுரிகின்றோம். எங்களது பெரும் பணி ஒவ்வொரு நாளும் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வதுதான்.

அத்துடன், நோயாளர்களையும் அடிக்கடி பார்வையிட்டு, தேவையான மருத்துவ உதவிகளையும் அளித் துக் கொண்டிருக்கின்றோம். எங்கள்




இருப்பிடம் மருத்துவமனைக்கு அண்மையில் இருப்பதால், காலையி லும் மதியமும் அதிகநேரத்தை நாங்கள் மருத்துவமனையில் செல விடக்கூடியதாக இருக்கின்றது.

*கேள்வி:-* இந்த மருத்துவமனை யில் வைத்தியர்களின் பற்றாக் குறை மற்றும் பல வசதிக்குறைவு கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. அவ்வாறான நிலையில் தங்களின் பணிபற்றிக் கூறமுடியுமா?

*பதில்:-* இங்கு நாம் சிகிச்சை களை அளிப்பதில் - எமது அறிவி னையும், சக்தியையும் அதிகமாகவே பயன்படுத்தவேண்டியுள்ளது. ஏனெ னில் எமது நாடுகளில் உள்ளது போன்று நவீன தொழில்நுட்ப உப கரணங்களின் வசதிகள் இங்கு இல்லை. அங்கு நாம் சிகிச்சை அளிக்கும் பொழுது காட்சித் திரை களிலேயே மனித உள்ளுறுப்புக ளின் செயற்பாடுகளை நேரடியாகவே அவதானித்து, அதற்கேற்ப மிக எளி தாக சிகிச்சைகளை அளித்துவிட முடியும். மேலும், போதியளவு நவீன உபகரணங்களையும் பயன்படுத் திக்கொள்ளமுடியும்

ஆனால், இங்கு எமது அறிவு, அனுபவம், சக்தி என்பனவற்றை அதிகமாகப் பயன்படுத்தியே சிகிச் சையளிக்க வேண்டியுள்ளது. ஏனெ னில், எமக்குத் தேவைப்படும் வைத்தியத்துறை சார்ந்த நவீன கரு விகள் இங்கில்லை. எனவே, நாம் மிகுந்த பொறுமையுடனும், திறமை யுடனும் செயற்பட்டே சிகிச்சை அளித்துக்கொண்டிருக்கின்றோம். எமது நாட்டில் நவீன கருவிகளைக் கொண்டு, அவற்றின் மூலமே சிகிச் சைகளை வழங்கிவிடமுடியும். இங்கு எமது அறிவு, அனுபவம், தாதியர் களின் உதவி என்பவற்றுடன் மேம் பட்ட சக்தியைப் பிரயோக்கித்து, நோய் அறிகுறிகளைக் கண்டறிந்து முறையான சிகிச்சைகளையும், சத் திர சிகிச்சைகளையும் மேற்கொள் கின்றோம்.

*கேள்வி:-* தங்கள் மருத்துவ சேவையில் மொழி ஒரு பிரச்சினை யாக இருக்கும் என்று நம்புகின் றோம். அது தொடர்பில் தங்களின் கருத்து என்ன?

*பதில்:-* உண்மையில் இது ஒரு பிரச்சினைதான். எங்களுக்குத் தமிழ் தெரியாது. ஆங்கில மொழியின் உத வியுடனேயே நாங்கள் எங்கள் பணி களை ஆற்றிக்கொண்டிருக்கின் றோம். மொழிபெயர்ப்பாளர்கள் அவ சியமாகத் தேவைப்படுகின்றார்கள். இங்குள்ள வைத்தியர்கள், தாதியர் கள்தான் எமக்கு உதவுகின்றார்கள். நோயாளர்கள் தங்களுக்குரிய நோயை எடுத்துக்கூற தமிழ்மொழியை உப யோகப்படுத்துகிறார்கள்.

எமக்கு தமிழ் தெரியாதபடியால், நாம் மொழிபெயர்ப்பாளர்களில் முழுக்கமுழுக்க நம்பிக்கைகொண்டே செயற்படுகின்றோம். மருத்துவத் துறை மொழிபெயர்ப்பைப் பொறுத் தவரை, இத்துறையில் புலமைமிக்க நீண்டகால அனுபவம் உள்ளவர்கள் இருப்பதே சிறப்பானது. குறுகிய நேர மொழிபெயர்ப்பாளராக இருப்ப வர்களால் சிலவேளைகளில் கஷ் டங்களைக்கூட அனுபவிக்க நேரி டும். இது நோயாளர் சம்பந்தப்பட்ட விடயம். இதனால் இதில் மிகுந்த கவனம் செலுத்தப்படவேண்டும். எனவே, நாம் மிகமிகக் கவனமாக மிகுந்த பொறுப்புடன் செயற்பட வேண்டியுள்ளது.

*கேள்வி:-* இங்குள்ள மக்கள் அவர்களது கலாசாரம், பண்பாடு தொடர்பாக தங்களின் கருத்து என்ன?

*பதில்:-* நாங்கள் உலகம் முழு வதும் பணியாற்றுகின்றோம். MSF உலகம் முழுவதும் தனது நிர்வா கத்தினைக் கொண்டுள்ளது. வெளி நாடுகள் பலவற்றிலும் நாம் சேவை யாற்ற வேண்டியிருப்பதனால், நாம் நிறையவே கற்கவேண்டியிருக்கின் றது. பல நாடுகளில் நாம் சேவை யாற்றுவதால், தன்னிச்சையாகவே பல விடயங்களைக் கற்றுக்கொள்ள வும் முடிகின்றது.

சாதாரண மக்களோடு நாம் இரண்டறக்கலந்து சேவையாற்ற எத் தனிக்கின்றோம். வேறுபட்ட கலா சாரங்களையும், மொழிகளையும் அறிய எங்களுக்கு முடிகின்றது.



*சத்திரசிகிச்சை நிபுணர் அமில்கர் கொன்ரெறாஸ், பெண்நோயியல் மகப்பேற்று நிபுணர் மரிக்கோ இற்றோ, மயக்கமருந்து நிபுணர் பீறர்.*

இலங்கையில் தமிழ் மக்களையும், தமிழ் கலாசாரத்தைப் பற்றியும், உங் களின் கடவுள் நம்பிக்கை பற்றி[illegible] நாம் மிக உயர்ந்த தகவல்களைப் பெறமுடிந்துள்ளது. MSF குழுவின் பல உறுப்பினர்கள் மிகமிக ஆர்வமாக இருந்து தங்கள் வாழ்க்கை முறை யையும் மாற்றியுள்ளனர்.

உங்கள் கலாசாரத்தைப் பின் பற்றி உணவு மற்றும் ஒவ்வொரு சிறு விடயங்களிலும் தங்கள் நாளாந்த நடவடிக்கையை மாற்றியுள்ளனர். எம்மைப் பொறுத்தவரையில், உங் கள் கலாசராத்தை நாம் அனுப விக்கிறோம். ஆனாலும், உங்கள் மொழியைக் கற்பதிலும், விளங்கிக் கொள்வதிலும் கடினத்தன்மையை உணர்கின்றோம்.

**நேர்காணல்:**
**இயே. ஜெயசுதன்**

# உலக வரைபடத்தில் இருந்து மறைந்துவிட்ட யூகோசிலாவியா!

*(நேற்றைய தொடர்ச்சி)*

1878 பெப்ரவரி 19 இல் ரஷ்யப் படைகள் **Plevna** என்ற நகரைக் கைப்பற்றியன. அதேயாண்டு ரஷ்யா-ஒட்டமான் பேரரசு இரண்டுக்கும் இடையில் அமைதி உடன்படிக்கை கைச்சாத்தானது.

சேர்பியா, மொன்ரநீக்றோ மற் றும் றோமேனியா நாடுகளின் சுதந் திரத்தை ஒட்டமான் பேரரசு அங்கீ கரித்தது.

பின்னர் 1912 இல் சேர்பியா விற்கும், துருக்கிக்கும் இடையில் நடந்த யுத்தத்தில், துருக்கியின் எச்சசொச்ச ஆட்சி முற்றாக முடி வுக்குவந்தது. முதலாவது உலக மகாயுத்தம் ஆரம்பித்தபோது போல் க்கன் பிரதேசம் சிறு சிறு நாடுக ளாகச் சிதறுண்டு கிடந்தன.

1914 யூன் 14 இல் அவுஸ்திரிய மன்னர் **Austrian Archduke Franz Ferdinand** பொஸ்னியுன் சேர்பியர் ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டார். அந்தக் கொலை முதலாவது உலக மகா யுத்தத்திற்கான கொடியேற்ற மாக அமைந்துவிட்டது.

யுத்த முடிவில் வெற்றி பெற்ற நட்பு நாடுகள் போல்க்கன் பிரதே சத்தைக் கூறுபோட முனைந்தன. அதற்காக அவுஸ்றோ - ஹங்கேரி பேரரசு (**Austro - Hungarian em- pire**) துண்டாடப்பட்டது. 1918 இல் சேர்பியர், குரோசியர், பல்கேரி யன்ஸ், அல்பேனியன்ஸ், மசிடோ னியன்ஸ் ஒன்றாக இணைந்து சேர் பியர்களின் இராச்சியம் (**Kingdom of Serbs**) என்ற அரசை உருவாக் கினார்கள். பின்னர் 1929 ஆம் ஆண்டு அது யூகோசிலாவியா என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. யூகோசிலா வியா என்றால் தென் ஸ்லாவ் அரசு (**South Slav State**) என்று பொருள்படும்.

1934 ஆம் ஆண்டு யூகோசிலா வியா மன்னர் அலெக்சாந்தர் - மசி டோனியாப் புரட்சிவாதிகளால் படு கொலை செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து போல்க்கன் நாடுகளில் புரட்சி இயக்கங்கள், தேசிய இயக் கங்கள் தலைதூக்கின.

இரண்டாவது உலக யுத்தத் தின்போது நாசி ஜேர்மனி - ஐரோப்




பிய நாடுகள் மீது படையெடுத்து, அவற்றை ஆக்கிரமித்தபோது, யூகோ சிலாவியா இனக்குழுக்களிடம் பிள வேற்பட்டது. பாதிப்பேர் ஜேர்மனி யரை "விடுவிப்பாளர்" (**Liberators**) எனக்கூறி வாழ்த்தி வரவேற்றனர். மீதிப்பேர் நாசி ஜேர்மனியை எதிர்த் தனர்.

ஜேர்மனியின் ஆக்கிரமிப்பை எதிர்த்து இரண்டு கெரில்லா இயக் கங்கள் போரிட்டன. அதில் ஒன்று மார்ஷல் யோசிப் புறஸ் தித்தோ (**Josip Broz Tito**) தலைமையில் சோவியத்நாட்டின் ஆதரவோடு போரி ட்டது.

1943 ஆம் ஆண்டு மன்னராட்சி ஒழிக்கப்பட்டு, டிட்டோ தலைமை யில் - சேர்பியா, குரோசியா, ஸ்லோ வினா, பொஸ்னியா - கேர்ஸ்கொ வினா, மசிடோனியா, மொன்ரெ நீக்றோ குடியரசுகள் அடங்கிய சம வுடமை யூகோசிலாவிய இணைப் புக் குடியரசு (**Yugolovia Federal Socialist Republic**) பிரகடனப்படுத் தப்பட்டது. ஜனாதிபதி டிட்டோ கலப்பு இனத்தவர். இந்தக் குடியர சில் சேர்பியர்களே பெரும்பான்மை இனத்தவராக விளங்கினார்கள்.

யூகோசிலாவியக் குடியரசுகளின் எல்லைகளை, யூகோசிலாவிய கம் யூனிஸ்ட் கட்சியே தீர்மானித்தது. அது இனவாரி அடிப்படையில் அமைந்திருக்கவில்லை. எடுத்துக் காட்டாகக் குரோசியக் குடியரசோடு சேர்பியப் பெரும்பான்மைப் பிரதேசம் இணைக்கப்பட்டது. இதனால், குரோ சியாவின் மொத்த மக்கள்தொகை யில் 20 விழுக்காடு சேர்பிய இனத்த வர்களாக இருந்தார்கள்.

இப்படிக் குரோசியாவோடு சேர் பியப் பெரும்பான்மைப் பிரதே சத்தை இணைத்ததற்கு ஒரு உள் ளாந்தரக்காரணம் இருந்தது. குரோ சியர்கள் தனிநாடு ஒன்றினை உரு வாக்குவதற்குச் சேர்பியர்கள் தடை யாக இருப்பார்கள் என்ற நம்பிக் கையே அந்தக் காரணமாகும்.

சேர்பியர்கள் யூகோசிலாவியக் குடியரசுகளில் ஒன்றான குரோசியக் குடியரசின் குடிமக்களாக இருந்த காரணத்தால், சேர்பியர்கள் இல் லாத தனிச்சுதந்திரக் குரோசியக் குடியரசுக்கான ஆயிரம் ஆண்டு காலக்கனவு 1991வரை நிறைவே றாது போய்விட்டது.

குரோசியக் குடியரசில் மட்டு மல்ல, ஏனைய குடியரசுகளிலும் கணிசமான சேர்பியர்கள் வாழ்ந் தார்கள். 1974 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட புதிய அரசியல் யாப்பு குரோசியர், ஸ்லோவினி யர்கள், முஸ்லிம்கள் மற்றும் அல் பேனியர்களது தேசிய உணர் வையும், பிரிவினை உணர்வையும் அதிகரிக்கச் செய்தது.

அதிபர் டிட்டோவின் தலை மையில் யூகோசிலாவியா கம்யூ னிஸ நாடுகள் பின்பற்றிய "கட்ட ளைத் திட்டம்" (**"Command Plan- ning"**) என்ற பொருளாதார மாதிரி முறைக்குப் பதில் "சந்தை சோஷ லிச (**"Market Socialism"**) பொரு ளாதார மாதிரி முறையைப் பின்பற் றியது.

இதனால் பெரும்பாலும் விவ சாயநாடாக இருந்த யூகோசிலாவியா நடுத்தரக் கைத்தொழில் நாடாக மாறியது. உலக அரங்கில் அணி சேரா நாடுகளின் முன்னணி நாடாக யூகோசிலாவியா விளங்கியது. கால னித்துவப் பிடியில் இருந்த நாடுக ளின் விடுதலைக்கு அது ஆதரவு வழங்கியது.

**நக்கீரன்**

மேலும் அதிபர் டிட்டோ அமெ ரிக்கா மற்றும் சோவியத் வல்லர சுகளுக்கு இடையில் பக்கம் சாராது இரண்டுக்கும் நல்லபிள்ளையாக நடந்துகொண்டார். ஆனால், சோவி யத் நாட்டின் சர்வாதிகாரியாக யோசப் ஸ்டாலின் இருந்தபோது, அந்த நாட்டின் கட்டுப்பாட்டுக்குள் வரமறுத்து, அதனோடு அவர் முரண் பட்டுக்கொண்டார்.


1980 இல் அதிபர் டிட்டோ காலமானார். அவரது மறைவோடு இரும்புப்பிடிக்குள் அவர் வைத் திருந்த யூகோசிலாவியாக் குடியரசு சிதற ஆரம்பித்தது. டிட்டோவின் இடத்துக்குச் சுழற்சிமுறையில் ஒன் பது பேர் நியமிக்கப்பட்டார்கள். 1985 இல் ஸ்லோபொடன் மிலோசிவிக் அதிகாரத்துக்கு வந்தார். இவர் அல்பேனியர்களுக்கு எதிரான போக் கைக் கடைப்பிடித்தார். ஒரு அகண்ட சேர்பியாவை (**"Greater Serbia"**) உருவாக்குவது அவரது கனவாக இருந்தது.

1985 ஆம் ஆண்டளவில் யூகோ சிலாவியா பாரிய பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தது. பெரிய பெரிய தொழிற்சாலைகளில் உற் பத்தியான பொருட்களுக்குச் சந்தை வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. தொழிற்சாலைகளை நிறுவ மே[illegible] லக நாடுகளிடத்தும், உலகவங்கி போன்ற நிதி நிறுவனங்களிடத்தும் வாங்கியகடனை அடைக்கமுடியாமல் அது திண்டாடியது. அனைத்துலக நிதி நிறுவனம், தான் கொடுத்த கடனைத் திருப்பி அடைக்குமாறு நெருக்கியது.


1979-1984 இற்கும் இடைப்பட்ட காலத்தில் யூகோசிலாவியாவின் வருவாய் 30 விழுக்காடு வீழ்ச்சி அடைந்தது. அதேசமயம், 1988 இல் விலைவாசி உயர்வு 200 விழுக் காடாக உயர்ந்தது. வேலையில்லா தோர் தொகை அதிகரித்தது. இவை மக்களது பொருளாதாரச் சுமையை மேலும் அதிகரித்தது. மக்கள் திண்டாடினார்கள்.

உண்மையில் 1974 இல் கொண்டு வரப்பட்ட புதிய யாப்பின் பின்னர், யூகோசிலாவியா இணைப்பாட்சி (**Federal**) என்ற தோற்றத்தைவிட்டு, கூட்டாட்சி (**Confederal**) ஆக [illegible] மாறிவிட்டது. ஒவ்வொரு இ[illegible] பாட்சி அரசின் ஆளும் வகுப்பு (**bur- eaucracy**) மைய அரசின் கட்டளை களைச் செல்லாக்காசாக்க ஆரம்பித் தது. ஜனாதிபதி டிட்டோவின் ஆளு மையொன்றே அந்தக் காலகட்டத் தில் அந்தநாடு சிதறுண்டு போகாமல் காப்பாற்றியது.


ICC Cricket World Cup SOUTH AFRICA 2003



# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




## ஓராயிரம் ஆசைகளைக் கொன்ற அந்த 'ஒன்று'


பொல்லொக் - பரிதாபம்

சர்வதேசக் கிரிக்கெட் ஆட்டங்கள் அதுவும் உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் மகிழ்ச்சிகரமானவையா? இல்லை. சில வேளைகளில், மிகத் துயரமானவை. துயரம் சில சில பகுதி ரசிகர்களை மட்டும் பாதிக்கும். சில துயரங்கள் கிரிக்கெட் உலகையே தாக்கும். அதுவே, திங்களன்று நடைபெற்றது. தென்னாபிரிக்கா இறுதிப்போட்டியில் - அவுஸ்திரேலியாவுடன் போட்டியிடும் என்று நிச்சயமாக எதிர்பார்க்கப்பட்ட அணி.

ஆனால், நடந்ததை கிரிக்கெட் ரசிகர்கள் நன்கு அறிந்திருப்பார்கள். திறமைவாய்ந்த தென்னாபிரிக்க அணியை அதிர்ஷ்ட தேவதை ஏன் அணைக்க மறுக்கிறாள்? புரியாத புதிராகவே இருக்கிறது. ஒரு முறையா? இரண்டு முறையா? இது மூன்றாவது முறை. தென்னாபிரிக்கா, உயர் கிண்ணம் ஒன்றைப் பெறுவதில் திறமை இருந்தும் தடுக்கி விழுந்தமை. ஷோண் பொல்லொக் ஒரு விடயத்தை மிக மனவருத்தத்துடன் ஒப்புக் கொள்கிறார். DRESSING ROOM இல் தான் போட்ட கணக்கு - தப்பிதமானது என்பதும், அதுவே தங்களை அடுத்த கட்டத்திற்கு நகர்வதைத் தடைசெய்து விட்டது என்றும் கூறுகின்றார். மழை பொழிய ஆரம்பித்ததும், மழையால் ஆட்டம் தடைப்பட்டால் என்ற ஊகிப்பில், இரு அணி முகாம்களிலும் சில கணிப்புக்கள் நடைபெற்றுள்ளன. அந்த வகையில், சனத் சரியான கணிப்பைச் செய்ய, ஷோண் பொல்லொக் தவறான கணிப்பைச் செய்திருக்கிறார். ஒரு TIE நிலையை உருவாக்க, 229 போதும் என்பதை சனத் சரியாகவே கணக்கிட்டிருக்கிறார். ஆனால், வெற்றிக்கு 230 தேவையென்பதை சரியாகக் கணிக்காத பொல்லொக் 229 காணும் என்று பிழையாகக் கணித்திருக்கிறார். (இது தான் விதியா?) நிக்கி போஜேயிடம் கொடுத்தனுப்பிய கடதாசித் துண்டு மைதானத்தின் மத்திக்குச் செல்லவில்லை என்பது உண்மைதான்.


அத்தப்பத்து - கைகொடுக்கும் நாயகன்


ஆனால், 229 என்ற செய்தி பவுச்சருக்குச் சென்றது நிச்சயமானது என்கிறார் பொல்லொக். பவுச்சர் என்ன செய்வார் பாவம். தனக்கு வழங்கப்பட்ட கட்டளையைச் சரியாகவே நிறைவேற்றினார் அவர். இறுதியானதாக இருந்திருக்கும் என்ற அந்த ஓவரில் முரளியின் ஐந்தாவது பந்தை ஒரு SIX ஆக்கி 229 என்ற எண்ணிக்கையாக்கிய பவுச்சர், இறுதிப் பந்தை MID WICKET புறமாகத் தள்ளிவிட்டார். இந்த நிலையில், இலங்கை முகாம், தென்னாபிரிக்க முகாம், 22 ஆயிரம் ரசிகர் கொண்ட மைதானம் எல்லாப்பக்கமும் பல்வேறு ஊகங்கள். அதன் தொடர்பில மகிழ்ச்சியான வெளிப்பாடுகள். ஆனால், அந்த ஆட்டம் அற்புதமானதொரு அணியின் கையில் இருந்து நழுவிப் போய்விட்டிருந்ததும் - அணியே இந்தத் திருவிழாவில் இனி இல்லையென்றாகிவிட்டதும், நிச்சயமாக இருந்ததை ரசிகர்கள் எவருமே சரியாகப் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கவில்லைதான். ஆனால், இறுதியில் எல்லோருக்கும் எல்லாமே தெளிவுக்கு வந்தபோது மைதானம் மட்டும் மங்கலாகவே புகார்படிந்தே இருந்தது. அதற்குக் காரணம் வருண பகவான்விட்ட கண்ணீரா? அல்லது இருபத்திரண்டாயிரம் தென்னாபிரிக்க ரசிகர்கள் (அந்த நிலையில் மைதானத்தில் இருந்த அனைவருமே) சொரிந்த கண்ணீரா? புரியவேயில்லை.


சனத் - கடவுளுக்கு நமஸ்காரம்

நிர்மலன்

## நெஞ்சம் மறப்பதில்லை

உலகக்கிண்ணப் போட்டிகளில், இறுதிப் போட்டியில் ஆடும் என்று எதிர்பார்க்கப்பட்ட, தென்னாபிரிக்க அணிக்கும், தென்னாபிரிக்க மண்ணிலேயே தன் பலத்தைக் பெருக்கிக் காட்டி விஸ்வரூபமெடுத்த, இலங்கை அணிக்கும் இடையிலான ஆட்டம் அபூர்வமானதாக அமைந்துவிட்டது. இலங்கை அணிக்கு தென்னாபிரிக்காவை வெல்வது பெருமை. SUPER SIX இற்குள் செல்வதில் பிரச்சினை இல்லை. ஆனால், தென்னாபிரிக்காவுக்கு வாழ்வா சாவா என்ற நிலை. முதலிலே துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த இலங்கை அணி பெரும் நம்பிக்கையுடனேயே களமிறங்கியது என்னவோ உண்மைதான். ஆனால், சனத்தோ, ஹசானோ தென்னாபிரிக்க வேகத்தின் முன்னால் நின்று பிடிக்க முடியவில்லை. ஏதோவொரு சரிவின் ஆரம்பம் இது என்றே இலங்கை ரசிகர்கள் திடுக்கிட்டார்கள். ஆனால், அத்தப் பத்துவும் அரவிந்தவும் ஒன்று சேர்ந்தபோது - அனுபவம் திடசங்கற்பம், ஆற்றல் எல்லாம், கலந்த சேர்வை - நிலைமை தலைகீழாக மாறியது. அனேகமாக இந்த இருவரின் உலகக் கிண்ண இறுதிப் போட்டி இதுவாகக் கூட இருக்கலாம். ஆனால், இவர்கள் இருவரும் சுகமானதொரு மனப்பதிவை ரசிகர்கள் மத்தியில் ஏற்படுத்தி விட்டனர். இடி, மின்னல், சூறாவளி, பிரளயம் எல்லாம் ஒன்று சேர்ந்தால் எப்படி இருக்குமோ அப்படித்தான் இருந்தது இந்தச் ஜோடியின் ஆட்டம். வர்ணனையாளர்களாலேயே, தம் ஆச்சரியத்தையும் உணர்வையும் மறைக்க இயலவில்லை. இந்த நாள் அத்தப்பத்துவின் நாள் என்றார்கள் அவர்கள். 300 ஐத் தாண்டும் எண்ணிக்கை என்று எண்ணியபோது, தென்னாபிரிக்கா தன் வலிமையைக் காட்டத் தொடங்கியது. இரண்டு **HERO**க்களும் அடுத்தடுத்து விழ - பின்வந்த அனைவரையும் **ZERO** ஆக்கினார்கள் தென்னாபிரிக்க வீரர்கள். இறுதி ஐந்து விக்கெட்டுக்களுக்கு இலங்கை எடுக்கக் கூடியதாக இருந்த ஓட்டங்களை 25 மட்டுமே. ஆட்டம் முடிந்தபோது மறுக்கமுடியாதபடி இலங்கை மிகக் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையான 268/9 என்ற நிலையில் இருந்தது.


இலங்கை அணி - மீண்டும் 96 வருமா?


தென்னாபிரிக்கா ஆடத் தொடங்கிய போது, இரண்டு அணிகளுமே என்ன செய்யும் என்று ஊகிக்க முடியாததொரு நிலையே காணப்பட்டது. ஆரம்பத் துடுப்பாட்டவீரர்கள் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர்களை, இலாவகமாகச் சமாளிக்க ஓட்டங்கள் வேகமாக ஏறத் தொடங்கின. ஏற்ற இறக்கங்கள் இருந்தாலும் மார்க் பவுச்சரும், குளுஸ்னரும் ஒன்று சேர்ந்தபோது இலங்கைக்கு ஒரு முழுசாட்டம் ஏற்பட்டது. ஆனால், ஏற்பட்ட மழையில் 229/6 என்ற நிலையில் ஆட்டம் தடைப்பட்டது. இறுதியில் ஆட்டம் கைவிடப்பட்டு, இரண்டு அணிகளும் சமம் என்றவாறு தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்தத் தீர்ப்பு தென்னாபிரிக்க அணியைப் பொறுத்து, மரண தண்டனை ஆகிவிட்டதுதான். என்றாலும் கூட சளைக்காத இரண்டு அணிகளின் அக்கினியின் வெப்பத்தை ரசிகர்கள் நன்றாக உணர்ந்தார்கள்.

**SA - SL - THANK YOU.**

ஜோசப் கிருஷ்ணா

## தன்வினை தன்னைச் சுடும்!


நஸார் ஹுசைன் - SUPER SIX கை நழுவுமா?

உலகக் கோப்பைப் போட்டிகளுடைய Climax அதாவது Super Six தொடங்குவதற்கு இன்னும் சில போட்டிகள் மட்டுமே எஞ்சியுள்ள நிலையில், பல பெரிய அணிகள் எல் லாம் முக்காடுபோட்டுக்கொண்டு நாடு திரும்ப வேண்டிய பரிதாபமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது. இந்த நிலை எப்படி ஏற்பட்டது? குறிப்பாக நியூசிலாந்து அணி, கென்யாவுக்குச் செல்லாமல் கென்யாவுக்கு 4 புள்ளிகளை வாரி வழங்க, அப்போது கென்யாகூட நினைக்கவில்லை தாங்கள் இலங்கையை வெல்வோம் என்று. அதேபோல் சிம்பாப்வேக்கு செல்லாமல் இங்கிலாந்து அணி 4 புள்ளிகளை சிம்பாப்வேக்கு கொடுத்தது. இங்கே ஒரு விடயத்தைப் பார்க்க வேண்டும் என்னவென்றால், இரண்டு வெள்ளைக்கார அணிகளும் மிகவும் நிறவெறி பிடித்த அணிகளாகவே இருக்கின்றன என்று கூறினால் மிகையில்லை. ஆனால், இவர்கள் தம்முடைய நிறவெறிக்கு கிரிக்கெட் விளையாட்டை அடமானம் வைத்துவிட்டார்களே? இவர்கள் தம்முடைய ரசிகர்களையும் ஏமாற்றிவிட்டார்கள். இவர்களுடைய திமிரினால் அற்புதமான Super Six போட்டிகளில் கலந்துகொள்ளமுடியாது அந்த அணிகள் நாடு திரும்பவும் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால், இந்த உலகக்கிண் ணப் போட்டிகளில் அரசியல், நிற வெறி, மத வெறி ஆகியவற்றையும் தாண்டி நடைபெற்ற ஒரு சிறந்த போட்டி என்றால், அது இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டிதான். கடந்த 3 வருடங்களாக ஒருவரை ஒருவர் சந்திக்காது முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்த இந்த இரண்டு நாட்டு வீரர்களும் நன்கு ஆடினார்கள். ரசிகர்களுக்கு மனநிறைவான ஒரு போட்டியைத் தந்தார்கள். பரமவைரிகளான இவர்களே ஆடினார்கள் என்றால் இங்கிலாந்து, நியூசிலாந்து ஆகிய அணிகளுக்கு என்ன நடந்தது?


நியூசிலாந்து வீரர்கள் - கென்யாவுக்கு போயிருக்கலாமோ?

இது என்ன கிரிக்கெட் ஆட்டமா? அல்லது நிறவெறிப்போரா? *Very Sorry*.

PN.சுதர்சன்

## மற்றுமோர் ஆட்டமும் மழையால் பாதிப்பு

தென்னாபிரிக்காவில் நடைபெறும் உலகக்கிண்ணப் போட்டியில் மற்றுமோர் ஆட்டம் நேற்றும் மழை காரணமாகக் கைவிடப்பட்டது.

சிம்பாப்வேக்கு எதிராக பாகிஸ்தான் 14 ஓவர்களில் 3 விக்கெட் இழப்பிற்கு 73 ஓட்டங்கள் பெற்ற நிலையில் மழை காரணமாக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

இதனால் பாகிஸ்தான், சிம்பாப்வே ஆகிய இரு அணிகளுக்கும் புள்ளிகள் பகிரப்பட்டன.

### Super Six இற்கு தெரிவான அணிகளது புள்ளிகள்

| | |
|---|---|
| 1.அவுஸ்திரேலியா | (12 புள்ளிகள்) |
| 2.கென்யா | (10 புள்ளிகள்) |
| 3.இந்தியா | (08 புள்ளிகள்) |
| 4.இலங்கை | (7.5 புள்ளிகள்) |
| 5.நியூசிலாந்து | (04 புள்ளிகள்) |
| 6.சிம்பாப்வே | (3.5 புள்ளிகள்) |

## நாளும் ஒரு வினா

இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளில் இடைநடுவிலேயே ஒரு சாதனை முறியடிக்கப்படமாட்டாது என்பது உறுதியாயிற்று அது என்ன?

போட்டிகளை நடத்திய நாடே கிண்ணம் வெல்லும் என்பது.

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

### மேற்கிந்தியத்தீவுகள் எதிர் கென்யா அணி

**மேற்கிந்தியத்தீவுகள் அணி**

| | | |
|---|---|---|
| கைல் | C ஒபுயா b அங்காரா | 119 |
| சந்தர்போல் | C அங்காரா b ஓபுயா | 66 |
| லாறா | C ஓபுயா b டிக்கோலோ | 10 |
| சாமுவேல் | C பட்டேல் b ஒடும்பே | 14 |
| பவல் | C ஒட்டினோ b ஓடும்பே | 08 |
| ஹூப்பர் | St. ஒட்டினோ b அங்காரா | 06 |
| ஹிண்ட்ஸ் | b சுஜி | 10 |
| ஜேக்கப்ஸ் | not out | 09 |
| டிரேக்ஸ் | not out | 01 |
| உதிரிகள் | | 03 |
| மொத்தம் 7 விக்கெட் இழப்புக்கு (50 ஓவர்கள்) | | 246 |

**பந்து வீச்சு - கென்ய அணி**

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| சுஜி | 10 | 1 | 38 | 1 |
| அங்காரா | 07 | 0 | 53 | 2 |
| ஒங்கொண்டோ | 05 | 0 | 17 | 0 |
| ஒடும்பே | 10 | 0 | 62 | 2 |
| ஒபுயா | 10 | 0 | 48 | 1 |
| டிக்கோலோ | 08 | 0 | 28 | 1 |

**கென்ய அணி**

| | | |
|---|---|---|
| ஒட்டினோ | C டிலோன் b டிரேக்ஸ் | 03 |
| ஷா | C கைல் b டிலோன் | 12 |
| பட்டேல் | C லாறா b டிரேக்ஸ் | 11 |
| டிக்கோலோ | LBW b டிரேக்ஸ் | 12 |
| மோடி | C ஜேக்கப்பஸ் b டிரேக்ஸ் | 00 |
| ஒடும்பே | HW b லோசன் | 00 |
| டி. ஒ. ஒபுயா | C பவுல் b டிரேக்ஸ் | 04 |
| சி. ஒ. ஒபுயா | C பவுல் b லோசன் | 13 |
| ஒங்கொண்டோ | b பவுல் | 24 |
| சுஜி | C சந்தர்போல் b ஹிண்ட்ஸ் | 13 |
| அங்காரா | not out | 00 |
| உதிரிகள் | | 12 |
| சகல விக்கெட்டுக்களையும் இழந்து (35.5 ஓவர்கள்) | | 104 |

**பந்து வீச்சு - மேற்கிந்தியத்தீவுகள் அணி**

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| டிலோன் | 10 | 1 | 31 | 1 |
| டிரேக்ஸ் | 10 | 2 | 33 | 5 |
| லோசன் | 8 | 0 | 16 | 2 |
| பவுல் | 04 | 2 | 08 | 1 |
| சந்தர்போல் | 02 | 0 | 06 | 0 |
| ஹிண்ட்ஸ் | 1.5 | 0 | 07 | 1 |

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homelan

# சம்பள உயர்வை வலியுறுத்தி அரச ஊழியர் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தும் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று கொழும்பில் நடைபெற்றது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஆட்சிப்பீடம் ஏறிய பின்னர் பொருட்களினதும், சேவைகளினதும் விலைகள் அதிகரித்தபோதும், அரசாங்க ஊழியர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்படவில்லை என ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்த அகில இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

புறக்கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்னால் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பெருமளவு பொதுமக்கள் கலந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# அமைதிக்கு ஆதரவுத் தீர்மானம் மாகாணசபையில் தோற்கடிப்பு!

(கொழும்பு)

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு பூரண ஆதரவு வழங்க வேண்டுமென்ற தீர்மானம், வடமேல் மாகாண சபையின் 14 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

தீர்மானத்தைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அசோக வடிவமங்காவ மாகாண சபையில் பேசும் போது- பல உயிர்களுக்கும் சொத்துக்களுக்கும் இழப்பு ஏற்படுத்திய 20 ஆண்டு கால யுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வரும் முயற்சிகளுக்கு சபை ஆதரவு வழங்க வேண்டும் என்று கோரினார்.

விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்தத்தை மீறும் இத்தருணத்தில் இத்தீர்மானத்தைக் கொண்டுவருவது வருத்தத்துக்குரியது என்று மாகாண சபையின் தொழில் அமைச்சர் விஜயசிங்க தெரிவித்தார்.

எனினும்- ஜே.வி.பியையும், பொ.ஐ.முவையும் சேர்ந்த உறுப்பினர்கள் இத்தீர்மானத்தை நிராகரித்தனர். 11 பேர் தீமானத்துக்கு ஆதரவாகவும் 25 பேர் எதிராகவும் வாக்களித்தனர்.

# தப்பியோடிய படையினரை மன்னிக்க அமைச்சு முடிவு

இராணுவத்தை விட்டு தப்பியோடியவர்களை சட்டபூர்வமாக நடவடிக்கை எதுவும் எடுக்காமல் மன்னித்துவிடுவது என பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது. இத்தகைய படையினருக்கு படையை விட்டு விலகியதற்கான சான்றிதழ் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இவர்களில் எவராவது மீண்டும் படையில் இணையவிரும்பினால், அவர் மூன்று வருடங்களுக்கு மேலாக படையை விட்டு விலகியவராக இருக்கக்கூடாது என்றும், குற்றச்செயல் எதிலும் சம்பந்தப்படாமல் இருக்க வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

60 ஆயிரம் படையினர் தற்போது இராணுவத்தை விட்டு தப்பியோடியிருப்பதாகத் தெரிவிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# புதிய விமான நிலையம் அமைக்க அரசு திட்டம்

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை மேலும் விஸ்தரிக்க அரசு எடுத்த முயற்சிக்கு பொதுமக்கள் தரப்பிலிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இதனால் மற்றுமோர் பாரிய ஓடு பாதை கொண்ட விமான நிலையத்தை அமைப்பது குறித்து ஆராயப்பட்டுவருகிறது.

மத்துகம, வீரவல, கொக்கல, ஹிங்குரான்கொட, திருமலை ஆகிய இடங்களில் ஏதாவது ஒரு பிரதேசத்தில் புதிய விமான நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இரண்டு சர்வதேச விமான நிலையங்களை அமைப்பதல்ல எமது நோக்கம், அவசர நிலைமைக்கு ஏற்ப பாரிய விமானங்கள் தரையிறங்கக்கூடிய ஓடுபாதை கொண்ட விமானநிலையம் ஒன்றை கைவசம் வைத்திருப்பதே எமது திட்டம் என சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை தெரிவித்துள்ளது.

## அமெரிக்க, பிரிட்டிஷ்...

மற்றும் மேலதிக பொலிஸ் பிரிவுகள் இத்தூதரக பாதுகாப்பிற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கொழும்பிலுள்ள ஈராக்கிய தூதரகத்தினால், அரசியல் கட்சி ஒன்றுக்கு இரண்டு மில்லியன் ரூபா வழங்கப்பட்டு, அமெரிக்கத் தூதரகம் முன் அவர்களை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட பணிப்பு விடுக்கப்பட்டுள்ளதாக சில புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

வெளிவந்துவிட்டது G.C.E. A/L 2003
மாணவர்களுக்கான
பொதுச் சாதாரணப் பரீட்சை
வழிகாட்டி நூல்


முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன்
ஆக்கியோர்: P.கமல்தாசன் & P.உமாசங்கர்
பூபாலசிங்கம், சுப்பிரமணியம், துர்க்கா (சுன்னாகம்),
பிரியங்கா (பருத்தி.), அறிவமுது (வன்னி), கவிதா (வவுனியா).

# யாழ்.பெண்கள் நிலை குறித்து நோர்வே குழு நேரில் ஆராய்வு



யாழ். வருகை தந்த நோர்வே பிரதிநிதிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி, நோர்வேயிலிருந்து - யாழ்ப்பாணம் வந்துள்ள குழுவினர் ஆராய்ந்துள்ளனர்.

நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த இக்குழுவினர் மனிதநேய அலுவலகத்தில் கலந்துரையாடலொன்றை நடத்தினர். டாக்டர் தியாகராஜா தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில், கடந்தகால யுத்தத்தினால் விதவைகளாக்கப்பட்ட 19,151 பெண்களுக்கு எவ்வகையான உதவிகளை மேற்கொள்வது, பெண்களுக்கான சிறுகைத்தொழிலினை ஏற்படுத்திக்கொடுத்தல், கூட்டு முயற்சிகளில் பெண்களை ஈடுபடுத்தி குடும்ப வருமானத்தினை ஈட்டுதல், சிறுவர் போசாக்கு, வறுமை, வேலையில்லா பிரச்சினை போன்ற விட[illegible]கள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

இன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ள உபகுழுக்கூட்டத்தில், இது சம்பந்தமான அறிக்கையை சமர்ப்பிக்க உள்ளதாக சந்திப்பில் கலந்துகொண்ட நோர்வேயின் பிரதிநிதி பேராசிரியர் டாக்டர் அஸ்றிட் என் கெய்பேர்க் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதி போல் எரிக், பெண்கள் அமைப்பு இயக்குநர் சரோஜா சிவச்சந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

யாழ். வந்த இக்குழுவினர் - அரச அதிபர், தமிழீழ மாணவர் பேரவையினர், பல்கலைக்கழக பீடாதிபதிகள், மனித உரிமைகள் ஆணைக் குழு அதிகாரி, பெண்கள் அமைப்பு நிலையத்தினர், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் ஆகியோரையும் சந்தித்தனர்.

# ரணில் - பிரபாகரன் கூட்டணி என் கதிரையை பங்குபோடவே!

## பண்டாரவளையில் ஜனாதிபதி தெரிவிப்பு

பிரதமர் ரணிலும், புலிகளின் தலைவர் பிரபாகரனும் இணைந்து எனது கதிரையைப் பங்குபோடத் திட்டமிடுகின்றனர் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றஞ்சாட்டியுள்ளார். பண்டாரவளையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும்போதே அவர் இக்குற்றச்சாட்டை தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் -

பிரபாகரனால் என்னை முட்டாளாக்க முடியாது. அதனால் முட்டாளாக்குவதற்காக ரணிலைத் தெரிவு செய்துள்ளார். நான் ஒருபோதும் ஓடிவிடப்போவதில்லை. அப்படி நான் ஓடிவிட்டால் இருவரும் சேர்ந்து எனது ஆசனத்தை பங்குபோடுவர்.

சமாதானப் பேச்சுக்களை, பிரதமர் ரணில், பிரபாகரனைப் பற்றி அறியாது தொடருகிறார். அடுத்த சுற்றுப்பேச்சுக்கள் தூத்துக்குடியில் நடக்குமா இல்லையா என்பது பற்றி எனக்குத் தெரியாது. ரணில் இப்போது மண்டியிட்ட நிலைதான் என அவர் மேலும் தெரிவித்தார்.

அண்மையில் கோலாலம்பூர் சர்வதேச பொதுநலவாய வருடாந்த மாநாட்டில் கலந்துகொண்டு பேசிய ஜனாதிபதி, சமாதான முயற்சிகள் தொடர்பில் ரணில் அரசு சிறப்பாக செயலாற்றி வருவதாக பாராட்டிப் பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வேலைநிறுத்தத்தால் பரீட்சை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் வேலை நிறுத்தப் போராட்டத்தினால் இன்று பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருந்த பரீட்சை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## மகளிர் விவகார..

தீபிகா, குமுதினி சாமுவல், திருமதி பைகூன் சகாரிகா, கலாநிதி பசீலா ரியாஸ் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். புலிகள் தரப்புக் குழுவில் சிவகாமி சுப்பிரமணியம், ரேணுகா சண்முகராஜா, மதிமலர் பாலசிங்கம், சிறிதேவி சின்னத்தம்பி, வசந்தபிறேமினி சோமசுந்தரம் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

## போரில் பாதிப்புற்ற...

விடுதலைப் புலிகள் இயக்கமும், யுனிசெப் அமைப்பும் விடுத்துள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயலமர்வில் அரசாங்கப் பிரதிநிதிகளும், சர்வதேச முகவர் நிலையங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ள இருக்கின்றனர்.

இச்செயலமர்வின் பின்னர் மாவட்ட மட்டத்திலும் செயலமர்வு இடம் பெறவுள்ளது.

சிறுவர்களின் உரிமை தொடர்பான பயிற்சிகள் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கும், மாவட்ட அரசியற்துறை தலைவர்களுக்கும் ஏப்ரல் மாதத்தின் இரண்டாவது வாரத்தில் வழங்கப்படவுள்ளது.

கிளிநொச்சியில் - அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் யுனிசெப் பிரதிநிதி றெற் சைபனுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது, இந்த இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன.

# முஸ்லிம் எம்.பிக்கள் குழு நோர்வே தூதுவரை சந்தித்தது

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நோர்வே தூதுவரைச் சந்தித்தனர்.

அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளில், முஸ்லிம்களின் தரப்புக் குறித்து ஆராய சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்று தூதுவரிடம் தெரிவித்ததாக, முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

இந்தப் பேச்சுவார்த்தையில், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம், தேசிய ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பேரியல் அஷ்ரப், அமைச்சர் நூர்டீன் மசூர் ஆகியோரும் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## மேலும் 105 இந்திய...

மீனவர்கள் இந்திய மீனவர்கள் அனைவரையும் மடக்கிப்பிடித்து வந்து தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். இவர்கள் பயன்படுத்திய இருபத்திநான்கு மீன்பிடிப் படகுகள் தலைமன்னார் கடற்கரையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன.

மேற்படி மீனவர்கள் அனைவரும் பொலிஸாரினால் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

நேற்றுமுன்தினமும் இவ்வாறு சுமார் 40 மீனவர்களுடன் அவர்களது 16 படகுகளும் பேசாலை மீனவர்களால் கைப்பற்றப்பட்டு தலைமன்னார் பொலிஸாரிடம் [illegible]டைக்கப்பட்டு நீதிமன்றத்தில் [illegible] செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மீனவர்கள்...

யாக நடந்துவரும் இத்தகைய அச்சுறுத்தல்களை தவிர்க்க கச்சதீவை இந்தியா மீளப்பெறுவதே ஒரே வழி என அ.இ.அ.தி.மு.கவைச் சேர்ந்த பி.ஜி.நாராயணன் சபையில் தெரிவித்தார்.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.64 | 97.07 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 151.78 | 153.08 |
| 1 யூரோ | 103.78 | 104.94 |
| 1 சுவிஸ் பிராங் | 70.83 | 71.96 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 58.24 | 59.26 |
| 1 ஜப்பானிய யென் | 00.81 | 00.82 |
| 1 சவூதி றியால் | 25.84 | 25.84 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.